விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 054 வள்ளுவர் ஆண்டு 2053 தை 29 வெள்ளிக்கிழமை (11.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## ஜனாதிபதி இன்று வவுனியா விஜயம்

### தமிழ் மொழி கல்வெட்டு திடீர் இடமாற்றம்




*(வவுனியா)* ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று வவுனியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இந்நிலையில் தமிழ் மொழி கல்வெட்டு ஒன்று திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. *(15ஆம் பக்கம் பார்க்க)*

## எந்தத் தேர்தல் நடந்தாலும் ராஜபக்ஷ அரசு மண் கவ்வும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

எந்தத் தேர்தல் நடந்தாலும் ராஜபக்ஷ அரசு படுதோல்வியடைவது உறுதி என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை 15

### வெளிநாட்டு சுற்றுலாப் பயணி உட்பட

## 10க்கு மேற்பட்டவர்களை கடித்த கட்டாக்காலி நாய்

### யாழ்.நகர் மத்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் மத்திய பகுதியில் கட்டாக்காலி நாய் ஒன்று வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவர் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்டவர்களுக்கு 15

## கொரோனா 31 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றினால் மேலும் 31 பேர் உயிரிழந்துள்ளனர். 15

# பயங்கரவாத திருத்தச் சட்டம்

## பாராளுமன்றில் சமர்ப்பிப்பு விவாதம் சபையில் இன்று நடைபெறும்

*(கொழும்பு)* பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் பாராளுமன்றில் நேற்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸால் சமர்ப்பிக்கப்பட்டது. இச்சட்ட மூலத்துக்கான விவாதம் இன்று சபையில் நடைபெறும். *(15ஆம் பக்கம் பார்க்க)*

### கோவிட் தொற்றால்

## கிளிநொச்சியில் இளம் பெண் மரணம்


(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய இளம் பெண் ஒருவர் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 15

### காரைநகர் செம்பாட்டில்

## எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியது



(அராலி)

காரைநகர் - செம்பாடு பகுதியில் உள்ள வீட்டில் 15

## தெல்லிப்பழையில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இளவாலை, உயரப்புலத்தைச் சேர்ந்த 18 வயதுடைய சசிக்குமார் லிசான் என்ற இளைஞரே உயிரிழந் 15

## பயங்கரவாத திருத்தச் சட்டமூலம் நீதியமைச்சர் சமர்ப்பிக்காதது ஏன்?

### சபையில் சுமந்திரன் எம்.பி கேள்வி



(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் திருத்தச் சட்டமூலத்திற்கு அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் 15

## அரச தாதியர் சங்கத்தின் பணிப்பகிஷ்கரிப்புக்கு இடைக்காலத் தடை

(கொழும்பு)

அரச தாதியர் சங்கம் மேற்கொண்டுள்ள பணிப்பகிஷ்கரிப்பை தொடர்ந்து முன்னெடுப்பதை தடுக்கும் வகையில் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

அரச தாதியர் சங்கம் மற்றும் அதன் தலைவர் சமன் ரத்ன பிரிய ஆகி 15

### நாட்டில் மேலும்

## +1,297 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான மேலும் 1,297 பேர் நேற்று அடை 15

## தனிமைப்படுத்தல் காலம் 7 நாட்களாக குறைப்பு!

(கொழும்பு)

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நபரின் தனிமைப்படுத்தல் காலத்தை குறைக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி முன்னர் 14 நாட்கள் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது.

எனினும் தற்போது தனிமைப்படுத்தல் காலத்தை 7 நாட்களாக குறைக்க 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை

## இலங்கை மின்சார சபை

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை பாரியளவில் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

எரிபொருட்களின் விலையை அதிகரிக்கப்போவதில்லை என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தபோதும் விரைவில் எரிபொருள் விலையை நிச்சயமாக அதிகரிக்கவுள்ளதாக மின்சார சபையின் அழைப்பாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், மின் கட்டணத்தை அதிகரிப்பதன் மூலமே வெற்றிபெற வேண்டும் எனவும் இன்று அதிகளவு மின்சாரம் எரிபொருளில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் வெகுவிரைவில் கணிசமான அளவு அதிகரிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ம)

# உளவளத்துணையாளர் வைத்தீஸ்வரன் காலமானார்



ஓய்வுபெற்ற சுகாதாரக் கல்வி உத்தியோகத்தரும் உளவளத் துணையாளருமான கார்த்திகேசு வைத்தீஸ்வரன் அவர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார். அவருக்கு வயது 87.

இணுவிலைச் சொந்த இடமாகக் கொண்ட கா. வைத்தீஸ்வரன் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய சுகாதாரக் கல்வி உத்தியோகத்தராகக் கடமையாற்றி, சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மூலமாக மக்கள் மத்தியில் சுகாதார அறிவுரைகளைப் பரப்பியவர்.

ஓய்வுக்குப் பின்னர் உளவளத்துணையாளராகச் செயற்பட்டதுடன் திருமந்திரம் மற்றும் சைவ சித்தாந்தக் கருத்துக்களை சுகநலத்துடன் இணைத்துக் கருத்துரைகளை வழங்கிப் பலரது பாராட்டையும் பெற்றவர்.

25இற்கும் மேற்பட்ட சுகாதார வழிகாட்டல் நூல்களை எழுதி வெளியிட்டு தமிழ்ச் சமூகத் திற்குப் பெரும் பணியாற்றியவர்.

அவரின் இறுதிச் சடங்கு நேற்று கொழும்பில் நடைபெற்றது. (ம)

## தனிமைப்...

தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபருக்கு முதல் ஐந்து நாட்களே கடுமையானதாக இருக்கும், அடுத்துவரும் இரண்டு நாட்கள் சாதாரணமாக இருப்பதுடன், அதன்பின் அவர்கள் வேலைக்கு செல்லலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தியர் ஹேமந்த ஹேரத் இதனை தெரிவித்தார். (ம)

10வருட வெற்றிகரமான சேவையில். FEB/2022
U.K மற்றும் கனடாவில் உயர்கல்வி (C-3748)
குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்
நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...
WORLD EDUCATION CONSULTANCY
0779265447 / 0217200989

## யாழ். உரும்பிராயில் விபத்து!

### 3 வாகனங்கள் அடுத்தடுத்து மோதல்

**இராணுவச் சிப்பாய் உட்பட 3 பேர் படுகாயம்**

யாழ்.உரும்பிராய் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இராணுவ சிப்பாய் உட்பட மூவர் படு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, நேற்று காலை மருதனார்மடத்திலிருந்து கோப்பாய் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த கடற்படையின் வாகனம் பலாலி வீதியால் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இச் சம்பவம் இடம்பெற்றபோது உரும்பிராய் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாய் குறித்த சம்பவம் தொடர்பில் கடற்படையினரிடம் பதிவுகளை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது கோப்பாய் பக்கமாக வேகமாக வந்துகொண்டிருந்த ஹயஸ் வாகனம் இராணுவ சிப்பாயையும் கடற்படையினர் பயணித்த விபத்துக்குள்ளான வாகனத்தையும் மோதித்தள்ளியது. இச்சம்பவத்தில் இராணுவ சிப்பாயின் கால்கள் முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ம)

## வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அறிவித்தல்

**அங்கத்துவர் பட்டியல் காட்சிப்படுத்தல்**

எமது சங்கத்தின் 31.12.2021இல் உள்ளவாறான பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்கவும் வாக்களிக்கவும் தகைமை பெற்ற அங்கத்தவர் பட்டியல் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க கிளை நிலையங்களிலும் தலைமைக் காரியாலயத்திலும் 10.02.2022 வியாழக்கிழமை தொடக்கம் 26.02.2022 சனிக்கிழமை வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொடர்பில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 10.02.2022 தொடக்கம் 26.02.2022 வரையான காலப்பகுதிக்குள் சங்க செயலாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆட்சேபனை தெரிவிக்கும் விடயங்கள்!**

1. உறுப்பினர் ஒருவரின் பெயர் காணப்படாமை.
2. உறுப்பினர் பெயர், உறுப்பினர் இலக்கம் மற்றும் முகவரி தவறாகக் காணப்படுதல்.
3. ஒன்றுக்கு மேற்பட்ட ஒரு உறுப்பினர் பெயர் காணப்படுதல்.

செயலாளர்,
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், வட்டுக்கோட்டை. (C-3757)

## மரண அறிவித்தல்



### திருமதி சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம்

(குட்டியப்பா வீட்டு பாக்கியம்)

மலேசியா Klangஐப் பிறப்பிடமாகவும் யாழ்.அளவெட்டியை வசிப்பிடமாகவும் பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம் (குட்டியப்பா வீட்டு பாக்கியம்) அவர்கள் கடந்த 07.02.2022 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, லட்சுமி, சரஸ்வதி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, இரத்தினேஸ்வரி, சிவசுப்பிரமணியம், சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செல்லையா பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் தயாபரன், திருமாறன், மணிமேகலை, காலஞ்சென்ற அரவிந்தன், கலைவாணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுகந்தினி, மதிவதனி, பாலசுப்பிரமணியம், நந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் விஜய், ஜனனி, சரண்யா, அரவிந், தர்சிகா, அனித்தா, சுகன்யா, சஞ்சய் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
தயாபரன் - மகன் +447939035535,
திருமாறன் - மகன் +447958336791

(C-3754)

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி மகாலிங்கம் J.P

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)



தோற்றம் : 1939.07.07
மறைவு : 2022.02.10

செம்பாட்டு பிள்ளையார் கோவில் நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி மகாலிங்கம் அவர்கள் நேற்று (10.02.2022) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகாலிங்கம் விசாலாட்சியின் பாசமிகு கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.02.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சண்டிலிப்பாய் வடக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டிப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இரட்டையபுலம் வைரவர் கோவிலடி, சண்டிலிப்பாய் வடக்கு. (10131) 021 224 0077
தகவல் :- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் ஒரு தொகுதி ஈழத்தமிழர்களை நாடு கடத்த ஜேர்மன் முடிவு

(பேர்லின்)

**சித்திரவதைகள் தொடர்வதற்கான ஏராளமான சான்றுகள் இருந்த போதிலும் ஜேர்மனில் புகலிடம் கோரிய அதிகளவு ஈழத் தமிழர்களை இம்மாதம் நாடுகடத்த ஜேர்மன் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக ஈழத் தமிழர் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.**

சர்வதேச அளவிலான கடும் விமர்சனங்களுக்கு மத்தியில் கடந்த ஆண்டு புகலிடம் கோரிய 50 இற்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் ஜேர்மனியில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்.

இலங்கையில் தொடரும் சித்திரவதை, அச்சுறுத்தலை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பேர்லின் அங்கீகரித்த போதிலும் இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்த ஜேர்மனிய அதிகாரிகள் தொடர்ந்து திட்டமிட்டு வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியப் பிரிவின் பணிப்பாளர் ஹுக் வில்லியம்சன் குறிப்பிட்டார்.

ஜேர்மனியின் இந்த நாடு கடத்தல் முயற்சிகள் ஐரோப்பிய ஒன்றிய சட்டத்தை மீறும் வகையில் உள்ளன. குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அடிப்படை உரிமைகள் சாசனத்தின் 19(2) பிரிவின்படி சித்திரவதை அல்லது பிற மனித உரிமை மீறல்களை எதிர்கொள்ளும் ஆபத்தில் உள்ள எந்தவொரு நபரையும் நாடு கடத்த தடை உள்ளது.

ஐக்கிய இராச்சியத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் தமிழர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டால் தவறான முறையில் நடத்தப்படும் தீங்கு விளைவிக்கப்படும் ஆபத்து உள்ளதாக பிரிட்டிஷ் நீதிமன்றம் ஒன்று கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தனது வழக்கின் தீர்ப்பில் தெரிவித்தது.

2015-2018 வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் 178 நம்பகமான சித்திரவதைகள் இடம்பெற்றதை ஆவணப்படுத்தியதாக சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் தெரிவித்துள்ளது.

இது இலங்கையில் தொடர்ச்சியான சித்திரவதைகள் இடம்பெறுவதை எடுத்துக்காட்டுகிறது என ஈழத் தமிழர் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் ஈழத் தமிழர்களை நாடுகடத்த ஜேர்மனி முயல்வது சர்வதேச விதிகளை மீறும் வகையில் உள்ளதாகவும் அகதிகளுக்கு ஆபத்தை விளைவிக்கும் எனவும் ஈழத்தமிழர் மக்கள் பேரவை குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# இராமேஸ்வர மீனவர்களின் போராட்டம் 2 வது நாளாகவும் தொடர்ந்தது



(சென்னை)

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை இரண்டாவது நாளாகவும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மீனவர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் 800 இற்கும் அதிகமான படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (நி-5)

# 2020-2022 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக பதிவுகள் ஆரம்பம்

(கொழும்பு)

பரீட்சை திணைக்களத்தினால் கடந்த 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட கல்வி பொது தராதர உயர்தர பரீட்சைக்கான மீளாய்வு பெறுபேறுகளுக்கு அமைய 2020 - 2022 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன.

அதற்கமைய, கடந்த 4 ஆம் திகதியன்று வெட்டுப்புள்ளிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து, உரிய கல்வி பீடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோர், www.ugc.ac.lk என்ற இணையத்தளம் வழியாக எதிர்வரும் 15 ஆம் திகதிவரை தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-5)

# Tik-Tok போன்ற சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த சட்டங்கள் அவசியம்

## பாராளுமன்றில் அமைச்சர் நிமால் வலியுறுத்து

(கொழும்பு)

பாரிய கலாசார, சமூக மற்றும் தேசிய அனர்த்தங்களை ஏற்படுத்தும் Tik-tok போன்ற சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயத்தில் உடனடி கவனம் செலுத்தி சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டிய தருணம் இது எனவும் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சமூக ஊடகங்களை முற்றிலுமாகத் தடை செய்ய வேண்டும் என்று தான் வாதிடவில்லை என்றும் ஆனால் அவற்றைக் கட்டுப்படுத்தும் பொறிமுறையே காலத்தின் தேவை என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# கொவிட் தடுப்பூசி பெறாதோர் உரிய காலத்திற்குள் பெறவும்

## வடக்கு ஆளுநர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் கொவிட் இரண்டாம் மற்றும் பூஸ்டர் தடுப்பூசிகளை பெறாதவர்கள் உரிய காலத்துக்குள் பெற்றுக் கொள்ளுமாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொவிட் 19 நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு அரசாங்கம் தடுப்பூசிகளை வழங்கி வருகிறது.

இதன் அடிப்படையில் வடக்கு மாகாணத்திலும் கொவிட் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு தற்போது மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

ஆகவே இரண்டாம் தடுப்பூசிகளைப் பெறாதவர்கள் விரைவாக தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதோடு இரண்டாவது தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டவர்கள் பூஸ்டர் தடுப் பூசி தவறாமல் பெற்றுக் கொள்ளுமாறு அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (4-5-18)

# தமிழக மீனவர்கள் 9 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட 9 தமிழக மீனவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று சென்னை விமான நிலையத்தை சென்றடைந்ததாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரகம் தமது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் கணக்கில் தெரிவித்துள்ளது. (நி-5)

# இரும்பு விலை சடுதியாக அதிகரிப்பு

(கொழும்பு)

இரும்பு விலை சடுதியாக அதிகரித்துள்ளமையினால், தாம் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக, கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது இரும்பு மெற்றிக் தொன் ஒன்றின் விலையானது 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளதென இரும்பு இறக்குமதியாளர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலக சந்தையில், இரும்பின் விலை உயர்வு மற்றும் டொலர் பற்றாக்குறை ஆகியன இதற்கான பிரதான காரணிகளாகும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-5)


# நிர்வாக தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பின் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

இதில் புதிய தலைவராக சு.ஸ்ரீராமராவி, உப தலைவராக வீ.ஜீவராசா, செயலாளராக இ.தெய்வேந்திரம்பிள்ளை, உப செயலாளராக நா.வல்லிபுரம், பொருளாளராக ச.யோகராசா ஆகியோருடன் மேலும் ஆறு நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (4-5-30)

# உலக சமாதான மாநாடு; சிறப்புரை ஆற்ற மைத்திரிக்கு அழைப்பு




(கொழும்பு)

கொரிய தீபகற்பத்தில் நடைபெறவுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான உலக சமாதான உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று காலை தென்கொரியா நோக்கி பயணமானார்.

157 நாடுகள் பங்கேற்கும் உச்சிமாநாட்டின் தொடக்க விழாவில் சிறப்புரை ஆற்றுவதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஐ.நாவின் முன்னாள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே.தீவுகளுக்கு எதிரான கிரிக்கெட் தொடரை வென்றது இந்தியா



மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 என்ற கணக்கில் இந்தியக் கிரிக்கெட் அணி கைப்பற்றியுள்ளது.

அஹமதாபாத் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 237 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சூர்யகுமார் யாதவ் 64 ஓட்டங்களையும் ராகுல் 49 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், அல்சார்ரி ஜோசப் மற்றும் ஓடியன் ஸ்மித் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ரோச், ஹோல்டர், அகீல் ஹொசைன் மற்றும் பெபியன் அலென் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 238 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 46 ஓவர்கள் நிறைவில் 193 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், இந்தியக் கிரிக்கெட் அணி 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஷமர் ப்ரூக்ஸ் 44 ஓட்டங்களையும் அகீல் ஹொசைன் 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், பிரசீத் கிருஸ்னா 4 விக்கெட்டுகளையும் சர்துல் தாகூர் 2 விக்கெட்டுகளையும் மொஹமட் சிராஜ், யுஸ்வேந்திர சஹால், வொஷிங்டன் சுந்தர் மற்றும் தீபக் ஹூடா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், 4 விக்கெட்டுகளை வீழ்த்திய பிரசீத் கிருஸ்னா தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி, இன்று அஹமதாபாத் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (4-6)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2509

### சயந்தன்



மறந்தும் நினைத்து
விடக்கூடாது
காயப்படுத்தியவர்களை...

ஆனால்
நினைக்க மறந்து
விடக்கூடாது
கஷ்டத்தில்
உதவியர்களை..!!

### சாளினி



சிலருக்கு காரியம் ஆகும் வரை
God ஆக தெரியும் நாம்..
காரியம் முடிந்த பிறகு
Dog ஆக மாறி விடுகிறோம்!

### கனிஸ்ரன்

செல்போன் நம்பரை
ஆண்டுக்கணக்காக
மாற்றாமல் ஒரே நம்பரை
வைத்திருந்தாலே அவர்கள்
நேர்மையாக வாழ்க்கை
நடத்துகிறார்கள்
என்று அர்த்தம்

### டிசானா



கொஞ்ச நாள்
பேசாமல் இருந்தால்
சிம் கார்டு போல்...
சிலரின் அன்பும்
டி ஆக்டிவேட்
ஆகி விடுகிறது...!!

### சஞ்சீவன்

அதிகம் கோபப்படுபவனை
டெஸ்ட் பண்ணி பாருங்க
அவன் மிகுந்த நேர்மையோடும்
யாரையும் ஏமாற்றாமல்
வாழ்ந்து கொண்டு இருப்பான்
அவன் மற்றவர்களால்
ஏமாற்றப்படும் பொழுது
பொறுக்க முடியாமல்
பொங்கி எழுவான்

### மிதுனா



எல்லோருக்கு பிடிக்க வேண்டும்
என நினைத்து சுயம் இழந்து
வாழ்வதை விட சிலருக்கு மட்டும்
பிடித்தால் போதும் என திமிருடன்
வாழ்வது மேல்!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விவசாயிகளிடமிருந்து மஞ்சள் கொள்வனவு

(கொழும்பு)

விவசாயிகளிடமிருந்து மஞ்சளை உத்தரவாத விலையில் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறு தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்றுமதி விவசாய திணைக்களம் மற்றும் இலங்கை பல சரக்கு சந்தைப்படுத்தல் சபை என்பன இணைந்து கம்பஹா, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்ட விவசாயிகளிடமிருந்து 100.000 கிலோகிராம் மஞ்சளை கொள்வனவு செய்துள்ளன.

ஒரு கிலோகிராம் 165 ரூபாய் என்ற விலையில் கொள் வனவு செய்யப்படும் மஞ்சள் பதப்படுத்தப்பட்டு பலசரக்கு சந்தைப்படுத்தல் சபையின் விற்பனை நிலையங்கள் மூலம் நியாயமான விலையில் நுகர் வோருக்கு விற்பனை செய்யப்ப டும் என அவ்வமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# பேருந்து கவிழ்ந்து விபத்து 8 பேர் மருத்துவமனையில்



(கொழும்பு)

பொலநறுவை - சிங்க புர அலிவங்குவை பிரதேசத்தில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 8 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் பணியாளர்களை தொழிற்சாலைக்கு ஏற்றிச் செல்லும் தனியார் பேருந்தே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 23 பணியாளர்கள் அதில் பயணித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-5)

# ஊழியர் சேமலாப நிதியத்தின் மீது வரி அறவிடும் தீர்மானத்தை உடனடியாக நீக்க வேண்டும்

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியத்தின் மீது வரி அறவிடுகின்ற தீர்மானத்தை அரசாங்கம் உடனடியாக நீக்கிக் கொள்ள வேண்டும்.

அவ்வாறில்லாவிட்டால் தொழில் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுடன் இணைந்து இவ் வரி விதிப்பிற்கு எதிராகப் போராடுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஷோக அபேசிங்க எச்சரித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஓய்வூதிய நிதியம் ஆகியவற்றுக்கு வரி அறவிடுவதற்கு அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் தீர்மானம் தொடர்பில் ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் அஷோக அபேசிங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தவறான தீர்மானங்களால் ஏற்பட்ட எதிர்மறையான விளைவுகளுக்குரிய இழப்பீட்டை நாட்டு மக்கள் செலுத்தத் தேவையில்லை என்றும் அவர் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# மனித பாவனைக்கு உதவாத 40 ஆயிரம் உ.கிழங்குகள் மீட்பு



(தம்புள்ளை)

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் உள்ள இரண்டு தனியார் களஞ்சியசாலைகளிலிருந்து, மனித பாவனைக்கு உதவாத 40 ஆயிரம் கிலோகிராம் உருளைக் கிழங்குகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தம்புள்ளை நகர முதல்வர் தெரிவித்தார்.

பாகிஸ்தானிலிருந்து வர்த்தகர் ஒருவரால் இறக்குமதி செய்யப்பட்ட குறித்த உருளைக் கிழங்குகளை, சுத்தம் செய்து, அவற்றை பழுதடையாத உருளைக்கிழங்குகளுடன் கலந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

பாகிஸ்தானிலிருந்து வருகை தந்துள்ள சில வர்த்தகர்களினால் மிகவும் சூட்சுமமான முறையில் இந்த வியாபாரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், நாளொன்றிற்கு 35 தொடக்கம் 40 வரையான கனரக வாகனங்கள் வருகை தருவதாகவும் தெரியவந்துள்ளன.

இந்நிலையில், மேற்படி இரு களஞ்சிய சாலைகளையும் சீல் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நகர முதல்வர் மேலும் தெரிவித்தார். (நி-5)


## அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து) பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரத்துடன் கல்வி, பிறப்பத்தாட்சிப்பத்திரம், அனுபவச்சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளை இணைத்து பொது முகாமையாளர் அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி என்னும் முகவரிக்கு 25.02.2022 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**01. பதவி - காசாளர் (306/15)**

சம்பள அளவுத்திட்டம் (04/2018 இன் படி) 15545 - 18245 / 130X10 - 140X10

**பதவிக்குரிய தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 16வது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம் /கூட்டுறவு ஊழியர் 17வது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி

குறிப்பு:
1. இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தால் கோரப்படும் பிணைப்பணம் செலுத்துதல் வேண்டும்.
2. வயதெல்லை - 18 - 45 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

11.02.2022 பொதுமுகாமையாளர்

(c-3753)


# இராசிபலன்

11.02.2022
தை 29, வெள்ளிக்கிழமை
தசமி பிற்பகல் 3.33 மணிவரை

மிருகசீரிடம் முழுவதும்
சுபநேரம் - 6.34-8.04 மணிவரை
இராகுகாலம் -11.04-12.34 மணிவரை

சந்திராஷ்டமம்-விசாகம்

வளவன்




எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.




குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வருமானம் பெருகி வளம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.




பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படலாமல் பார்த்துக் கொள்வது நல்லது, கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாக லாம், கடவுளை வழிபட்டு அமைதி காண வேண்டிய நாள்.




மறைமுகப் போட்டிகள் மாறும், பிள்ளைகளால் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.




எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், உடல் நலன் சீராகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.




தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, பிறர் உதவியுண்டு, போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த்தொடர்புகள் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.




உறவினர் வழியில் மன திற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், செய்தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள் நடைபெறலாம்.




வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், சயன சுகக் குறைவுகள் இடம்பெறலாம்.




வழிபாட்டால் சிறப்பு பெற வேண்டிய நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பயணங்கள் கைகூடும்.




ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், போசன சுகமுண்டு.




குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

கனவு என்பது உனது வாழ்வின் முடிவு அல்ல, ஆரம்பமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களை ஒழிப்பதில் அரசாங்கம் தீவிர முயற்சி

## சித்தார்த்தன் எம்.பி குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

இன்று தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் இக்கட்டான கால கட்டத்தில் இலங்கையரசு தமிழ் மக்களின் இருப்பை இல்லாது செய்வதற்கு முயற்சி எடுப்பதுடன் தங்களுக்கான சர்வதேச ஆதரவை பெற்றுக் கொள்வதற்கான பிரச்சாரங் களை மிகவும் தீவிரமாக மேற் கொண்டு வருகிறது என பாரா ளுமன்ற உறுப்பினர் த. சித்தார் த்தன் தெரிவித்தார். நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிவைக் கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

இக் காலத்தில் தமிழ் மக்கள் தமது நலன்சார் வலுவான அரசியல் நிலைப்பாட்டை எடு க்க வேண்டும் என்பது கால த்தின் கட்டாயமாகும். அரசு தொல்பொருள் திணைக்களம் மற்றும் வேறு பல திணை க்களங்கள் ஊடாகவும் தமிழ் மக்களின் காணிகளை அபக ரிப்பதில் தீவிரம் காட்டிவரு கின்றது.

குறிப்பாக முல்லைத்தீவு மற்றும் கிழக்கு மாகாணத்தில் தனது வேலைத்திட்டத்தை தீவிரமாக செயற்படுத்தி வரு கின்றது. இதனூடாக தமிழ் மக்களின் தாயகக் கோட்பா ட்டை இல்லாது செய்ய முனை கின்றது.

மறுபுறத்தில் இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கும் தமிழ் நாட்டு மீனவர்களுக்கும் இடை யில் காணப்படும் பிரச்சினை களுக்கு தீர்வு காண்பதற்கு முயற்சிக்காமல் தாமதப்படுத்து வதனூடாக அவ் விருதரப்பி னர்களுக்குமிடையில் முரண் பாட்டை உருவாக்கின்றது. இது போன்ற பல விடயங்களில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை இல்லாது செய் வதற்கான முயற்சிகளை மேற் கொண்டுவருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (4-5-104)

# தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர்களை அச்சுறுத்தும் அரசாங்கம்

## தமிழ்த்தேசிய பண்பாட்டு பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தீவிர தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களை குறிவைத்து தாக்கும் ஸ்ரீல ங்காவின் பயங்கரவாத குற்ற த்தடுப்பு விசாரணைப் பிரிவி னரின் செயற்பாடுகளை வன் மையாகக் கண்டிக்கின்றோம் என அப்பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பா ளர் எஸ். நிஷாந்தன் தெரி வித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறி க்கையிலேயே மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில், இந்த நாட்டின் முக்கிய சட்டமான பயங்கரவாத தடைச் சட்டம் தமிழர்களை இல்லாது ஒழிப்பதற்கும், தமிழர்களை அடக்கி, ஒடுக்குவதற்குமே பய ன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கி ன்றது என்பதை இவர்களின் செயற்பாடுகள் மூலமாக அறி ந்துகொள்ள முடிகின்றது.

இப்பயங்கரவாத தடைச் சட்டம் என்பது நாட்டின் அர சியலமைப்புச் சட்டத்திற்கு முர ணானது என்பதை ஆட்சியா ளர்களும், பௌத்த பேரின வாதிகளும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழ் இனத்திற்கான சுயநிர் ணய உரிமையை வலியுறு த்தி போராடும் அனைத்து தமிழ் சிவில் அமைப்புக்கள் மீதும் சிங்கள பேரினவாதம் பாசிசக் கரம் கொண்டு கடுமை யான சட்டங்களை பாய்ச்சி இந்த அமைப்புக்களை இல் லாது ஒழிக்கின்ற செயற்பாடு களை தொடர்ச்சியாக செய்து வருகின்றது.

அந்த வகையில் தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை யின் முக்கிய செயற்பாட்டா ளர்கள் மீது தொடர்ச்சியாக பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கடுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றது.

அதுமட்டுமின்றி பொய்யான குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படு கின்றது. இதனை அரசு உட னடியாக நிறுத்த வேண்டுமென வும் அவர் தெரிவித்தார். (4-5)

# யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் ஒருநாள் பணிப்பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நேற்று ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



அடிப்படை சம்பள அதிக ரிப்பு, ஊழியர்களின் பிணக்கு தொடர்பில் விரைவான தீர்வு உள்ளிட்ட விடயங்களை வலியு றுத்தி பல்கலைக்கழக முன்ற லில் போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண் பாட்டை நீக்கு, ஆட்சிக்கு வரும் போது சம்பளப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று கூறினீர்கள் அந்த வாக்குறுதி என்ன ஆச்சு, அமைச்சரவை உபகுழுவின் முடிவை சம்பள ஆணைக்குழு நிராகரிப்பது ஏன்? போன்ற வாச கங்களை ஏந்தியவாறு போரா ட்டத்தில் ஈடுபட்டனர். (4-5-104)

# சிலை திறப்பு விழா பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மக்கள் கலைஞர் அமைப்பினரால் அமைக்கப்பட்ட கலாநிதி நடிகமணி வி.வி.வைர முத்துவின் சிலை திறப்பு விழா இன்று 11 ஆம் திகதி இடம் பெறவிருந்த நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை காரணமாக பிற் போடப்பட்டுள்ளது.

திறப்பு விழாவின் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித் துள்ளனர். (4-5)

# கும்பாபிஷேகம்

(குப்பிழான்)

பொன்னாலை ஸ்ரீ வரத ராஜப்பெருமாள் ஆலயப் பால ஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.20 மணிக்கு இடம் பெறும்.

இவ்வாலயப் பாலஸ்தாபன பூர்வாங்க கிரியைகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமா கின. (4-5-18)

# மஹோற்சவம்

(குப்பிழான்)

தெல்லிப்பழை விழிசிட்டி வீமசிட்டி சிவகுருநாத சுவாமி ஆலயப் பிலவ வருட மஹோ ற்சவம் இன்று வெள்ளிக் கிழமை காலை 10.30 மணி க்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகவுள்ளது.

தொடர்ந்தும் 12 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்று க்கிழமை பிற்பகல் 5 மணி க்குச் சப்பறத் திருவிழாவும், 21 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தோற்சவமும், அன்றையதினம் மாலை கொடி யிறக்க உற்சவமும் இடம்பெற வுள்ளன. (4-5-18)

# கஞ்சா விற்பனை; ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நடமாடி கஞ்சா பொதிகளை விற் பனை செய்த நபரை பொலி ஸார் கைது செய்துள்ள னர்.

சிறிய சிறிய பொதிகளாக, பொதி செய்து, நபர் ஒருவர் யாழ். நகரில் நடமாடி விற்பனை செய்து வருவ தாக, இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை யடுத்து பொலிஸாருக்கு தகவல் வழ ங்கப்பட்டது.

அதனடிப்படையில் பொலிஸார் சந்தேகநபரை கைது செய்ததுடன், கஞ்சா பைக்கட்டுக்களையும் மீட்ட னர். சந்தேக நபரை விசா ரணைகளின் பின்னர் நீதி மன்றில் முற்படுத்த நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்த னர். (4-5-18-33)

# உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களின் மீளாய்வுக் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உட்கட் டுமான அபிவிருத்தித் திட்ட ங்களின் முன்னேற்ற மீளா ய்வுக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ். மாவட்டச் செயலக மாநா ட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தலைமையில் நடைபெற் றது.

இக் கலந்துரையாடலில் ஒரு மில்லியன் வீட்டுத்திட்டம், 0.6 மில்லியன் வீட்டுத்திட்டம், மலசலகூடம் அமைத்தல், நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களுக்கான குடிநீர் வழங்கல், நலன்புரி நிலை யங்களில் வசித்த காணி கொள் வனவு செய்யப்பட்ட மக்களின் தற்காலிக வீட்டினைக் கொள் வனவு செய்யப்பட்ட காணிக்கு மாற்றுதல், பன்முகப்படுத்த ப்பட்ட வரவு செலவுத்திட்டம், சௌபாக்கியா அபிவிருத்தித் திட்டம், மீன்பிடி அபிவிருத்தித் திட்டம், கிராமிய மற்றும் பாரம் பரியக் கிராமிய ஒருங்கிணை ப்பு அபிவிருத்தித் திட்டம் தொட ர்பாக கடந்த வருடம் நடை முறைப்படுத்தப்பட்ட வேலை த்திட்டங்களின் பௌதிக, மற் றும் நிதி முன்னேற்றங்கள் தொடர்பாகவும் கலந்துரை யாடப்பட்டன.

மேற்படி கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் ம. பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். முரளிதரன், மாவட்டச் செயலக கணக்காளர், மாவட்டச் செயலகப் பொறியி யலாளர், பிரதேச செயலாள ர்கள், பிரதித் திட்டமிடல் பணி ப்பாளர் மற்றும் மாவட்டச் செய லக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்ட னர். (4-5-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கப்படவுள்ள மின்சாரக் கட்டணம் நாட்டு மக்களுக்கு மற்றொரு பேரிடி

(கொழும்பு)

**மின்சாரக் கட்டணத்தை பாரியளவில் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கை மின்சார சபையின் கூட்டு தொழிற்சங்க முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதன் மூலமே வெற்றி பெற முடியும்.

இன்று அதிகளவு மின்சாரம் எரிபொருளில் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதன்படி, எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் வெகுவிரைவில் கணிசமான அளவு அதிகரிக்கப்படும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை நாட்டில் ஏற்கனவே அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட பல பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

கொவிட் தொற்று மற்றும் அதனால் இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்கு, முடக்கம் என்பவற்றால் கடந்த இரு வருடங்களாக பாதிக்கப்பட்ட நாட்டு மக்கள் குறித்த விலை அதிகரிப்பை தாங்கிக் கொள்ள முடியாது பெரும் சிரமத்திற்கு மத்தியில் அன்றாட வாழ்க்கையில் ஈடுபட்டு வருவதை அறிய முடிகிறது.

இவ்வாறான தொரு சூழ்நிலையில் எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் மேலும் அதிகரிக்குமாயின் அது நாட்டு மக்களுக்கு பேரிடியாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என சமூக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (நி-5)


## சிவபூமி மனவிருத்திப் பாடசாலைகளுக்கான புதிய மாணவர் அனுமதி

கோண்டாவில், கிளிநொச்சி மனவிருத்திப் பாடசாலைகளுக்கான புதிய மாணவர் அனுமதி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

- இப் பாடசாலைகளில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் கற்பித்தலும், தொழிற்பயிற்சியும் நடைபெறுகிறது.
- மாணவர்களுக்கான போக்குவரத்து சேவையும் நடைபெறுகிறது.

தொடர்புகளுக்கு :- தலைமையகம்,
சிவபூமி மனவிருத்திப் பாடசாலை,
கோண்டாவில்.
021 222 7938
(10123)


# கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு



(கொழும்பு)

கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 35 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

சுகாதார அமைச்சின் கொரோனா தலைமை ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

அத்துடன், கொரோனா தொற்றினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் 15 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் பூஸ்டர் தடுப்பூசியினை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (நி-5)


## ௬௦ வது அகவையில் பிறந்த நாள் வாழ்த்தும் சேவை நயப்பும்




யா/ கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலையில் பல வருடங்கள் ஆசிரியராகச் சேவையாற்றி 13.02.2022 அன்று அகவை அறுபதில் ஓய்வு பெறும்

திருமதி.
**உதயராணி வைத்திலிங்கம்**
SLTS1
அவர்களை அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

1. யா/ கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலை -29.03.1990- 01.08.2004
2. யா/ கரணவாய் மகாவித்தியாலயம் -02.08.2004 - 08.02.2015
3. யா/ கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலை -09.02.2015- 12.02.2022

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/கரணவாய் மணியகாரன்தோட்டம்
அ.த.க. பாடசாலை

(C-3756)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 31 சூரி 4 செவ் 12 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Director N.S.K Universal Marketing<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12268 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: செவ் 8 சூரி 1<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8223 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: சூரி 2 செவ் 4 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: கொழும்பில் கடை<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12269 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: சூரி 11 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: அரச கணக்காய்வு திணைக்களத்தில் வேலை<br>எதிர்பார்ப்பு: சைவ போசனம் உள்நாடு ஆயின் அரசதொழில் அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/8224 |
| பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 39¾ சூரி 10 செவ் 3 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: தபாலக உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/12270 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: சூரி.செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்தவர்<br>தொ.இ:G/8232 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 16¾ சூரி 9 செவ் 10 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பிரான்ஸ் கடை PR இல்லை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடும் அல்லது வெளிநாடு அனுப்பக்கூடிய பெண்<br>தொ.இ: B/12271 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 13 சூரி, செவ் 9 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: அரச தொழில் (பல்கலைக்கழகம்)<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ:G/8234 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்
## குடியியல் நடவடிக்கை கோவை பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

மயூரி கனேந்திரன்
23 மூளாய் ஒழுங்கை
சுண்டுக்குளி
தற்போது
33 தேள்ஸ்டன் அவினியு இல்பேட்
லண்டன்
அவரது தத்துவக்காரர்
சிவானந்தன் யோன்சன் குகேந்திரன
300/27 சாரதா வீதி
நொச்சிமுனை மட்டக்களப்பு
வழக்காளி

வழ.இல:- காணி/1038/20

எதிர்

1. பாலசிங்கம் சரஸ்வதி
2. பாலசிங்கம் ஜெயமாறன்
இருவரும்
4/1 மூளாய் ஒழுங்கை
சுண்டுக்குளி
3. செல்லத்துரை சோமசுந்தரம்
216 குருசோல் வீதி
சுண்டுக்குளி
4. தேவமகேஸ்வரன் கமலாம்பிகை
60 மூளாய் வீதி
சுண்டுக்குளி
5. மகேந்திரா சாந்தரூபி
11 மூளாய் வீதி
சுண்டுக்குளி
யாழ்.சுண்டுக்குளி
சாமுண்டாம்பிகை
சமேத அருள்மிகு சிறி ஞான
வைரவர் ஆலய பரிபாலன சபை
உறுப்பினர்

எதிராளிகள்

மேற்குறித்த வழக்காளியால் மேற்குறித்த எதிராளிகளுக்கு எதிராக யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் சுண்டுக்குளி இறையில் அமைந்துள்ள **"புளியடி வளவு"** நிலப்பரப்பு 1 குளி 13 1/2 இதில் கிழக்கு பக்கமாக நிலப்பரப்பு 1/2 அதற்குரியவைகளுக்கும். மேற்குறித்த ஆதன மீட்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து இத்தால் பொதுமக்களுக்கு அறிவித்தல் தரப்படுகின்றது.

மறு தவணை : 25.02.2022

2022 ம் ஆண்டு மாசி மாதம் 07 ந் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்

வரைபு
வழக்காளியின் சட்டத்தரணி
(ந.தக்ஷாமினி)

(10124)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரேய்ன் பதற்றத்தை தணிக்க
## ஐரோப்பிய தலைவர்கள் புதிய நகர்வு

(கீவ்)

உக்ரேய்ன் - ரஷ்ய நெருக்கடியில் அமெரிக்காவின் நகர்வுகளை விட தமது சமாதான முயற்சிகள் பதற்றத்தை தணிக்கும் என்ற நம்பிக்கையில் ஐரோப்பிய தலைவர்களின் புதிய பேச்சுவார்த்தை முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

ரஷ்ய துருப்புகள் உக்ரேய்னில் நெருக்கடியை அதிகரிக்காது எனும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் உறுதிமொழியுடன், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரன் தலைமையில் ஐரோப்பிய தலைவர்களின் முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன.



கடந்த திங்கட்கிழமையன்று மொஸ்கோவில் ரஷ்ய தலைவர் புடினுடன் கிட்டத்தட்ட 6 மணி நேரம் நடத்தப்பட்ட பேச்சுக்களுக்குப் பின்னர் நேற்று முன் தினம் உக்ரேய்ன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் பேசிய மக்ரன் அதன் பின்னர் பெர்லினுக்குச் சென்று ஜேர்மன் சான்சலர் ஓலாப் ஸ்கோல்ஸ் மற்றும் போலந்து ஜனாதிபதி ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்த நிலையில் அடுத்த வாரத்தில் 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் ஓலாப் ஸ்கோல்சும் ரஷ்யா மற்றும் உக்ரேய்னுக்கு சென்று பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

உக்ரேய்ன் நெருக்கடியில் ஜேர்மனி ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுக்கவில்லையென்ற விமர்சனங்கள் உள்ள நிலையில் இந்த நகர்வை ஓலாப்ஸ்கோல்ஸ் எடுக்கவுள்ளார். (நி-5)

## 3.16 மில்லியன் பவுண்டுகளுக்கு விலை போன கறுப்பு வைரம்

(லண்டன்)

உலகின் மிகப்பெரிய வெட்டப்பட்ட கறுப்பு வைரமான "தி எனிக்மா" லண்டனில் நேற்று முன்தினம் முதல் காட்சிக்கு வைக்கப் பட்டது.

555.55 கரட், 55 முகம் கொண்ட வைரமானது, லண்டனின் புகழ்பெற்ற சோதேபி ஏல நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஒன்லைன் விற்பனையில் 3.16 மில்லியன் பவுண்டுகளுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்த வைரமானது 2.6 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியை ஒரு விண்கல் அல்லது சிறுகோள் தாக்கியபோது உருவானதாக நம்பப்படுகிறது. (நி-5)

## வான் தாக்குதலில் பயங்கரவாதிகள்
# 7 பேர் உயிரிழப்பு

(பக்தாத்)

ஈராக்கில் இடம்பெற்ற வான் தாக்குதலில் ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதிகள் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈராக்கில் கடும் ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் கடந்த 2017 ஆம் ஆண்டு அமெரிக்க படைகளின் உதவியோடு தோற்கடிக்கப்பட்டனர். ஆனால் அண்மைக் காலமாக அங்கு மீண்டும் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக அந்நாட்டின் வடக்குப் பகுதிகளில் அவர்கள் ஆதிக்கம் செலுத்த தொடங்கியுள்ளனர். அவர்களை ஒடுக்க இராணுவம் தீவிரமாக போராடி வருகிறது.

அந்த வகையில் வடக்கு மாகாணம் நினிவேயில் உள்ள ஹத்ரா பாலைவனத்தில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் நிலைகளை குறிவைத்து இராணுவம் அதிரடி வான் தாக்குதல் நடத்தியது.

இதில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் தங்களின் தலைமையகமாக பயன்படுத்தி வந்த 140 மீற்றர் நீளம் கொண்ட குகை குண்டு வீசி அழிக்கப்பட்டது.

மேலும் இதில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 7 பேர் கொல்லப்பட்டனர். (நி-5)

# காதலர் தினத்தை முன்னிட்டு ஓசூர் ரோஜாக்களுக்கு கிராக்கி

(டில்லி)

ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 14 ஆம் திகதி காதலர் தினத்தின் போது ஓசூரில் இருந்து வெளிநாடுகளுக்கு ரோஜாக்கள் ஏற்றுமதி செய்யப்படும். கடந்த 3 ஆண்டுகளாக கொரோனா பரவல் தாக்கத்தால் குறைந்த அளவில் மட்டுமே ரோஜாக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இந்த ஆண்டு காதலர் தினத்துக்கு கடந்த 4 ஆம் திகதி ஏற்றுமதி தொடங்கியது.



குறிப்பாக சிங்கப்பூர், மலேசியா, ஐக்கிய அரபு நாடுகள், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் கிடைத்தன. இதுவரை சுமார் 15 இலட்சத்துக்கும் அதிகமான ரோஜாக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. (நி-5)

# ஜப்பான் இளவரசிக்கு கொரோனா தொற்று



(டோக்கியோ)

ஜப்பான் நாட்டின் 38 வயதான இளவரசி யாகோவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரு தினங்களாக காய்ச்சல் மற்றும் தொண்டை வலியால் அவதிப்பட்டு வந்த யாகோவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதில் அவருக்கு வைரஸ் தொற்று இருப்பது உறுதியானது. அவருக்கு நோய் பாதிப்பு சற்று தீவிரமாக இருப்பதால் தலைநகர் டோக்கியோவில் உள்ள இம்பீரியல் அரண்மனை வளாகத்தில் இருக்கும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஜப்பான் அரச குடும்பத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான முதல் நபர் இளவரசி யாகோ என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# புதிய வகை கொரோனா உருவாக வாய்ப்பு உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனிவா)

புதிய வகை கொரோனா உருவாக வாய்ப்புள்ளது என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

சீனாவில் உருவான கொரோனா வைரஸ் 2 ஆண்டுகள் முடிந்து 3 ஆவது ஆண்டாக உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இந்த வைரஸ் ஆல்பா, பீட்டா, காமா, டெல்டா, ஒமிக்ரோன் என தொடர்ந்து உருமாற்றம் அடைந்து வருகிறது.

இதையொட்டி உலக சுகாதார அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கேள்வி-பதில் நிகழ்ச்சியில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அந்த அமைப்பின் கொரோனா தொழில்நுட்பக் குழுவின் தலைவர் மரியா வென் கோவ் பதில் அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது, கொரோனா வைரஸ் பற்றி நிறைய தெரிந்து கொண்டுள்ளோம். ஆனால் எல்லாமே நமக்குத் தெரியாது. மேலும் வெளிப்படையாக சொன்னால் இந்த வைரஸ் உருமாற்றங்கள் வைல்ட் கார்டு போல திடீரென்று தோன்றலாம். எனவே நாங்கள் நிகழ் நேரத்தில் அதைக் கண்காணிக்கிறோம். இது மாறும் போது, உருமாற்றம் நேருகிறது. அது மேலும் உருமாறுவதற்கு வாய்ப்பு உள்ளது.

ஒமிக்ரோன் வைரஸ் கவலைக்குரிய மாறுபாடு. இது கடைசி உருமாற்றமாக இருக்காது. அடுத்து உங்களுக்கு தெரியும் அது பரவ சிறிது காலம் அவகாசம் எடுக்கும். நாம் மற்ற வகை உருமாற்ற வைரஸ்களைக் கொண்டிருப்பதற்கான வாய்ப்புகள் உண்மையிலேயே அதிகமாக உள்ளது. பிஏ.1 வைரஸை விட பிஏ.2 வைரஸ் அதிகமாக பரவக் கூடியது. எனவே உலகம் முழுவதும் இந்த பிஏ.2 வைரஸ் கண்டறியப்படு வதை நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஒமிக்ரோன் பரவல் உலகளவில் அதிகரித்துள்ளது. தற்போது கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் அது உள்ளது. அதே நேரத்தில் முதலில் இந்த வைரஸ் பரவல் எழுச்சியை அறிவித்த நாடுகளில் அது கடந்த மாதம் முதல் குறையத் தொடங்கி உள்ளது.

இதனால் புதிய வகை உருமாறிய கொரோனா வைரஸ்கள் உருவாக வாய்ப்பு இருக்கிறது என்பது தெளிவாகி உள்ளது என அவர் குறிப்பிட்டார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் இணங்கி செல்வதாலேயே மீனவர் பிரச்சினைக்கு தீர்வு இல்லை

## மீனவ ஒத்துழைப்பு இயக்கம் சுட்டிக்காட்டு

**(நெளுக்குளம்)**

**மீனவ சமூகத்திற்கு இடை யிலே முரண்பாட்டை ஏற்படுத் தாமல் இந்த பிரச்சினைக்கு ஒரு சாதகமான தீர்வை வழங்க வேண்டும் என மீனவ ஒத்து ழைப்பு இயக்கத்தினுடைய தேசிய இணைப்பாளரும், வட கிழக்கு பிராந்தியங்களிற்கான இணைப்பாளருமான அன்ரனி ஜேசுதாசன் தெரிவித்தார்.**

இந்திய மீனவர்களுடைய தற்போதைய நிலைமைகள் தொடர்பாக தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினையானது பல வருடங் களாக தொடர்ந்து வருகிறது. சுமார் இருபது வருடங்களாக இந்த பிரச்சினை நீடித்த போதி லும் இலங்கையில் ஆட்சிக்கு வந்த, எந்த அரசும் இந்த பிரச் சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வை வழங்குவதற்கு முன் வரவில்லை.

குறிப்பாக, யுத்தத்திலே பாதி க்கப்பட்ட வடபகுதியிலே அதி லும் யாழ்ப்பாணத்திலேயே தொடர்ந்து இந்த பிரச்சினை நீடித்து வருகிறது.

இவ்வளவு காலம் புரையோ டிப் போயிருக்கிற இந்த பிரச்சி னைக்கு எங்களுடைய நாட்டில் இரண்டு சட்டங்கள் இருக்கின் றன.

2017 இலக்கம் 11 சட்டம், 2018 இலக்கம் ஒன்று, வெளி நாட்டு படகுகளை கண்காணிப் பதற்கான சட்டம். இந்த சட்டங் களை பயன்படுத்தி உரிய நடவ டிக்கைகளை எடுக்க முடியாத அரசாங்கமாக இருக்கிறது.

அன்று மீனவர்கள் வந்து கடலிலே மோதுவதற்கான ஒரு சூழ்நிலையை இலங்கை அர சாங்கம் உருவாக்கிக் கொடுத் திருக்கிறது என்பதுதான் உண்மை.

மேலும் பொருளாதார ரீதி யான விடயங்களில் இந்தியா வோடு இணங்கி செல்வதால் இவர்கள் இதற்கான தீர்வை வழங்குவதற்கு முற்படுவதி ல்லை.

இதனால் இரு நாட்டு மீனவ ர்கள் இரு சமூகங்களுக்கு இடை யிலே முரண்பாடு தோற்று விக்கப்படுகிறது.

ஆகவே இதற்கு ஒரு நிரந்தர மான தீர்வை வழங்குவதற்கு நம் நாட்டு சட்டத்தை பயன்படு த்தி கடற்படைக்கு அந்த அதிகா ரங்களை கொடுத்து எம் நாட்டுக் குள்ளே வராமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (4-5-299)



முல்லைத்தீவு ஊடக அமையத்தின் ஊடாக வாழ்வாதார உதவிகள் மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என்பன முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம்:-தவசீலன்)

# சதொச விற்பனை நிலையத்தில் வாடிக்கையாளர் மீது தாக்குதல்

(நெளுக்குளம்)

வவுனியா சதொச விற்பனை நிலையத்தில் பொருட்களை கொள்வனவு செய்ய சென்றவர் மீது அங்கு கடமையில் இருந்த உத்தியோகத்தர் ஒருவர் தாக் குதல் மேற்கொண்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா நகர்ப்பகுதியில் உள்ள சதொச விற்பனை நிலையத் திற்கு பொருளை கொள்வனவு செய்ய சென்ற வாடிக்கையாள ரொருவர் அங்குள்ள பொருட்க ளின் விலைகள் தொடர்பில் கடமையில் இருந்த ஊழியரிடம் கேட்டுள்ளார்.

இதன்போது ஊழியருக்கும் வாடிக்கையாளருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலை யில் ஊழியர் வாடிக்கையாளர் மீது தாக்கியுள்ளார். இதன் காரணமாக வாடிக்கையாரின் கால் பகுதியில் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் வவுனியா பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-299)

# நகை திருடியவர் பொலிஸாரால் கைது

(அராலி)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுருவில் மாதா கோவிலடி பகுதியில் 48 ஆயி ரம் ரூபாய் பெறுமதியான நகை மற்றும் 1500 ரூபாய் பெறும தியான கோழி நேற்று முன் தினம் களவாடப்பட்டது.

இது தொடர்பாக ஊர்காவற் றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டிற்கமைய விரைந்து செயற்பட்ட பொலி ஸார் அதே கிராமத்தில் 21வயது டைய நபரை கைது செய்த துடன் களவாடப்பட்டவற்றை யும் மீட்டனர்.

குறித்த சந்தேகநபரை இன்று ஊர்காவற்றுறை நீதி மன்றில் முற்படுத்தவுள்ள தாக பொலிஸார் தெரிவித்த னர். (4-5-33-104)

# படகு ஏலம் மன்னாரில் நிறுத்தம்

(மன்னார்)

தலைமன்னார் பியர் இற ங்கு துறையில் நேற்று வியா ழக்கிழமை மதியம் இந்திய மீனவர்களின் படகுகள் ஏல விற்பனை செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஏல விற் பனையில் கலந்து கொள்ள மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உள்ளடங்க லாக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 30 இற்கும் மேற்பட்ட கொள்வனவாள ர்கள் வருகை தந்திருந்த னர்.

எனினும் அறிவிக்கப்ப ட்டது போன்று ஏல விற்பனை இடம் பெறவில்லை என வருகை தந்த கொள்வன வாளர்கள் தெரிவித்தனர்.

காலை முதல் மதியம் வரை ஏல விற்பனைக்காக காத்திருந்த போதும் இறுதி நேரத்திலேயே குறித்த ஏல விற்பனை இடம் பெறாது என ஏற்பாட்டாளர்களினால் தெரி விக்கப்பட்டது.

இந்த நிலையில் தூர இட ங்களில் இருந்து வருகை தந்த கொள்வனவாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுள்ளனர். (4-5-285)

# சுகாதார தொழிற் சங்கங்கள் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

சம்பள பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுகாதாரத் தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெ டுத்தனர்.

தாதியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட 16 தொழிற் சங்கங்களைச் சேர்ந் தோர் பல்வேறு கோரிக்கை களை முன்வைத்து கடந்த திங் கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியாக பணிப்புறக்கணிப்பு மற் றும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதற்கு ஆதரவு தெரிவித்து வவுனியா மருத்துவமனைக்கு முன்பாக நேற்று குறித்த ஆர்ப் பாட்டம் இடம்பெற்றது. இதில் சுகாதார சேவையைச் சேர்ந்த 18 தொழிற் சங்கங்களின் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர் கள், "சம்பளப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு வேண்டும், சுகாதார நிர்வாக சேவையை நிறுவுக, உரிய காலப்பகுதியில் பதவி உயர்வு வழங்கு, சம்பள முரண்பாட்டினை நீக்கு, மருந் துகளின் விலைகளை உடனடி யாக குறை" உள்ளிட்ட பல்வேறு கோரிக்களை முன்வைத்து கோசங்களை எழுப்பியதுடன், சுலோக அட்டைகளையும் ஏந்தி யிருந்தனர்.

அத்துடன், தமது கோரிக்கை க்கு சுகாதார அமைச்சு சாதகமான பதிலை வழங்காது விடின் தமது போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்த னர். (4-5-250)

# கைவிடப்பட்ட நிலையில்

## சேதன பசளை உற்பத்தி நிலையம்



(துருமபுரம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு மேற்குப் பகுதியில் கடந்த 2014ஆம் ஆண்டு ஜப் பானிய மக்களின் நிதி உதவி யில் அமைக்கப்பட்ட கட்டிடத் தில் சேதனப்பசளை உற்பத்தி நிலையம் பல வருட காலமாக பயன்பாடு இன்றி கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

தற்பொழுது நாட்டில் சேதனை உரதத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு வரும் நிலையில் இக்கட்டடம் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் இதனை மீளபயன்படுத்த நட வடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் தெரிவித் தனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் சேதனப்பசளை உற்பத்தி நிலை யத்தை மீள பயன்படுத்த நட வடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத பட்டியலில் தொடர்ந்தும் விடுதலைப் புலிகள்

## ஐரோப்பிய ஒன்றியத்தை பாராட்டிய இலங்கை

(கொழும்பு)

பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் தொடர்ந்தும் விடுதலைப் புலிகள் அமைப்பை வைத்திருப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இலங்கை தனது பாராட்டுகளை தெரிவித்துள்ளது


பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒத்துழைப்பு குறித்து இலங்கையும் ஐரோப்பிய ஒன்றியமும் ஆராய்ந்துள்ளன.

இதன்போதே, விடுதலைப் புலிகளை தொடர்ந்தும் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் வைத்திருப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இலங்கை தனது பாராட்டுகளை தெரிவித்துள்ளதாக தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் போது சர்வதேச தராதரங்களைப் பின்பற்றவேண்டியதன் அவசியத்தையும் இரு தரப்பும் வலியுறுத்தியுள்ளன. (நி-5)

# செய்தித்துளிகள்

## புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட உந்துருளி முற்றாக தீக்கிரை



(கொழும்பு)

ஏ9 வீதி ஊடாக நேற்று முன்தினம் இரவு மாத்தளை நோக்கி பயணித்த உந்துருளி ஒன்று நாவுல, அரங்கல பிரதேசத்தில் வைத்து முற்றாக தீக்கிரையாகியுள்ளது.

குறித்த உந்துருளி புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட நிலையில், அதனை கொண்டு செல்லும் வழியில் இந்த விபத்து நேர்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் உந்துருளியை செலுத்திச் சென்ற நபருக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லையென விசாரணைகளை முன்னெடுத்துவரும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

## சுகாதார ஊழியர்களின் போராட்டம் 4 ஆவது நாளாக தொடர்கிறது

(கொழும்பு)

சுகாதார தொழிற்சங்க ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று 4 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

பதவி உயர்வு, இடர்கால கொடுப்பனவு, சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு தீர்வை வழங்குமாறு இலங்கையின் சுகாதார தொழிற்சங்க ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுக்கும் நிலையில், சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

### விரதங்கள்



## சகல செல்வங்கள் அருளும் கிருஷ்ண ஜெயந்தி



மறுகணமே சகாதேவன் கண்ணனை கட்டி விட்டான்

எப்படி?அவன் அறிஞன் அல்லவா? தன் அன்பினால் பக்தியினால் இறைவன் கண்ணனை தன் உள்ளத்தில் அடக்கி கட்டி விட்டான். இறைவன் தொண்டர் உள்ளத்தில் அடக்கம். தொண்டர் பெருமை சொல்லவும் பெரிதே?

இது தான் அன்பின் மகத்துவம்.

### வழுக்கு மரம்

கிருஷ்ஜெயந்தி அன்று வழுக்கு மரம் ஏறுதலும் உறுயடி திருவிழாவும் நடைபெறும் . இது கிருஷ்ணனின் இளமைக்கால திருவிளையாடல்களை நினைவுபடுத்தும்.

வலிமையான கம்பம் ஒன்றை நிறுத்தி அதன் உச்சியில் ஒரு பட்டு துணியில் நகை, பணம் முதலிய பரிசு பொருட்களை கட்டி தொங்க விடப்பட்டு இருக்கும். இளைஞர்கள் வழுக்கு மரத்தில் ஏறி பரிசுப் பொருட்களை எடுக்க முயற்சிப்பார்கள். வழுக்கு மரத்தில் தண்ணீரைவீசி அடிப்பார்கள்.இதில் திறமையானவர்கள் வெற்றி பெறுவர்.

இதே போன்று உறிகளில் நகை, பலகாரம் வைக்கப்பட்டு இருக்கும். அவற்றை கயிற்றால் பிணைத்து சிறு ராட்டினங்களின் மூலம் இயக்குவார்கள். ஒருவன் நீண்ட தடியால் உறிச்சட்டியை உடைக்க முயலும் போது அது உயரே தூக்கப்படும். இந்த நிகழ்ச்சி பார்க்க விந்தையாக இருக்கும்.

### வழிபடும் முறை

தன்னை விரும்பும் அனைத்து உயிர்களிடமும், அன்பு காட்டி சகலவித செல்வங்களையும் வாரி வழங்கும் வள்ளல் அவன். கிருஷ்ண ஜெயந்தி அன்று விரதம் இருந்து கண்ணனை வழிபட்டால் வேண்டியது நிறைவேறும். நினைத்தது நடக்கும். கண்ணன் பிறந்த தினத்தன்று பகலில் விரதம் இருந்து இரவில் கண் விழிக்க வேண்டும். மாலை 6 மணிக்கு வீட்டில் பூஜை அறையில் கிருஷ்ணர் விக்ரகம் அல்லது படத்தை வைத்து அதற்கு சந்தனம், குங்குமம் இட்டு அலங்கரிக்க வேண்டும். வீட்டின் வாசற்படியில் இருந்து பூஜை அறை வரைக்கும் கிருஷ்ணனின் பாதத்தை மாக்கோலமாக இட வேண்டும். இப்படி செய்வதால் கிருஷ்ணன் காலால் நடந்து நமது வீட்டிற்குள் வருவதாக ஐதீகம். குழந்தைகளை கண்ணனாகவும் ராதையாகவும் அலங்கரிக்க வேண்டும்.

கிருஷ்ணர் அஷ்டோத்திர நாமாவளி அல்லது பாடல்களை பாடி அர்ச்சனை செய்ய வேண்டும். பூஜைக்கு கண்ணனுக்கு உகந்த வெண்ணை, சீடை, முறுக்கு, லட்டு, அதிரசம், பால், தயிர், அவல், கற்கண்டு, பழங்கள், அப்பம் போன்ற பலகாரங்களை செய்து நைவேத்தியம் செய்ய வேண்டும். பின்னர் கற்பூர தீபாரதனை செய்து பூஜையை நிறைவு செய்ய வேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ணர் காயத்திரி
ஓம் தாமோதராய வித்மகே
ருக்மிணீ வல்லபாய தீமஹி
தந்நோ கிருஷ்ண; ப்ரசோதயாத்.

இந்த மந்திரத்தை உச்சரித்தால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

(முற்றும்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 280 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 160 |
| பச்சைமிளகாய் | 600 | 550 | 600 |
| தக்காளி | 140 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 90 | 60 |
| கோவா | 200 | 220 | 240 |
| கரட் | 520 | 550 | 600 |
| பூசணி | 160 | 150 | 200 |
| புடோல் | 150 | 200 | 200 |
| வாழைக்காய் | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 170 | 160 |
| பாகற்காய் | 300 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 180 | 320 |
| கருணைக் கிழங்கு | 150 | 100 | 120 |
| பயற்றங்காய் | 400 | 350 | 320 |
| லீக்ஸ் | 200 | 200 | 300 |
| பீற்றூட் | 250 | 280 | 300 |
| கறிமிளகாய் | 500 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 1200 | 1000 | 1200 |
| போஞ்சி | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | - | 240 |
| கீரை - 1 பிடி | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 140 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 240 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 70 | 140 | 200 |
| முள்ளங்கி | 60 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 110 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் வைரஸின் ஆயுட்காலம் 5 நாட்களே

## ஆய்வில் புதிய தகவல் என்கிறார் ஹேமந்த

(கொழும்பு)

**கொரோனாத் தொற்றுக்குள்ளான ஒருவருக்க 5 நாட்களுக்கு மட்டுமே உடலில் வைரஸ் செயற்பாட்டில் இருக்கும் என அண்மைய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொவிட் வைரஸின் பல்வேறு திரிபுகள் உலகம் முழுவதும் பரவத் தொடங்கியதால், ஒவ்வொரு வைரஸின் விளைவுகள் குறித்தும் பல்வேறு மட்டங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கமைய, தொற்றுக்குள்ளானோருக்கு ஏற்படும் பாதிப்பு வைரஸின் ஆயுட்காலம் போன்ற பல காரணிகளை மருத்துவ ஆராய்ச்சியாளர்களால் கண்டறிய முடிந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-5)

# பாரிய குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்குவது அவசியம்-நிமால் சிறிபால



(கொழும்பு)

தெரிவு செய்யப்பட்ட பாரிய குற்றங்களுக்கு நாட்டில் மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவது அவசியமாகுமென தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் பாராளுமன்றில் தெரிவித்தார்.

பாரிய போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை நீடிப்பதற்கு இடமளிக்க வேண்டாமெனவும் சபையில் கேட்டுக் கொண்ட அமைச்சர், இதுபோன்ற திட்டமிட்ட செயற்பாடுகளுக்கு மரண தண்டனை வழங்க வேண்டுமென்றும் தெரிவித்தார். (நி-5)

# பலம் மிக்க புலிகள் அமைப்புக்கு முடிவு கட்டியவர் மகிந்த

## ஜோன்ஸ்டன் புகழாரம்

(கொழும்பு)

தோற்கடிக்கவே முடியாது எனக் கூறப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பையே தோற்கடித்த தலைவர்தான் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ. அதே போல் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களைக் காத்தவர்தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுப் பேரணிகளின் 'முதலாவது பொதுஜன பேரணி' நிகழ்வு நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ரஜரட்ட (அநுராதபுரம்) என்பது எமக்கு என்றும் கைகொடுக்கும் மண். 2015 இல் எமக்குத் தோல்வி ஏற்பட்டபோதுகூட ரஜரட்டவில் வெற்றி பெற்றோம். இங்குள்ள மக்கள் போலிகளுக்கு ஏமாறவில்லை.

பிரபாகரனைத் தோற்கடிக்க முடியாது, புலிகள் அமைப்பு பலம் மிக்கது என அன்று தெரிவித்தனர்.

ஆனால், அந்த அமைப்புக்கு மூன்றரை வருடங்களில் முடிவுகட்டிய தலைவர்தான் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ.

நாடு நெருக்கடியான நிலையில் இருக்கும்போதுதான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியைப் பொறுப்பேற்றார். அதன் பின்னர் கொரோனா வைரஸ் தொற்று பரவியது. எமது ஜனாதிபதி துவண்டு விடவில்லை.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் தீவிரம் காட்டினார். நாட்டு மக்களின் உயிரைப் பாதுகாத்தார். எனவே, இவ்விரு தலைவர்களும் உலக வரலாற்றில் இடம் பிடிப்பார்கள்" என அவர் தெரிவித்தார். (நி-5)

# பரம்பரை அரசியலை முடிவுக்குக் கொண்டுவர அனைவரும் ஒன்றிணைவோம்-சஜித் அழைப்பு

(கொழும்பு)

பரம்பரை அரசியலைத் தகர்த்து இராணுவ மற்றும் பொலிஸ் மயமாக்கலை தடுக்க எல்லோரும் ஒன்றிணைய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்தார்.

இளைஞர்களும் கல்வியாளர்களும் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர்.

சர்வாதிகார ஆட்சியும் சகாக்களுக்காக சட்டத்தை மாற்றுதல், பணத்தை கொடுத்தல் போன்ற செயற்பாடுகளும் தற்போது தாராளமாக இடம்பெற்று வருகின்றன. இவற்றிலிருந்து மக்களைக் காக்க நாம் ஓரணியில் திரள வேண்டுமென அவர் தெரிவித்தார். (நி-5)



# இன்று ஒரு தகவல்

## மனதினுள் இருக்கும் மகத்தான சக்தி

நேரப்போகும் நல்லவற்றையும் கெட்டவற்றையும் செய்து கொண்டிருக்கும் ஒவ்வொரு செயலிலும் உள்ள நிறை குறைகளையும் நம் மனத்தினுள் இருந்து கொண்டு இனம் புரியாத ஓர் உணர்வொன்று உணர்த்திக்கொண்டே இருக்கும்.

இத்தகைய உணர்வுகளை மதிக்க வேண்டும். அந்தச் சக்தியை நாம் வலிமைப்படுத்தினால் நமக்கு யாரும் வழி காட்டத் தேவையில்லை. நமக்கு நாமே வழிகாட்டியாகத் திகழலாம்.

பெரும்பாலானவர்கள் புறமனம் என்னும் மேலோட்டமான உள்ளத்திற்கு மதிப்புக் கொடுத்துச் செயல்பட்டு வருகின்றனர். இது பெரும் தவறு.

இத்தகையவர்கள் நாளடைவில் கொஞ்சம் மனசாட்சி அற்றவர்களாய் மாறிக் கொடுங் குற்றங்களைக் கூடப் புரிய ஆரம்பித்துவிடுவார்கள். எதை செய்தாலும் அதிலும் நியாயம் கற்பிக்கும் தன்மையை பெற்று விடுவார்கள்.

தீயவற்றையும் சரியனவை என்று வாதிக்கும் விபரீதச் செயல்களில் இறங்கி விடுவார்கள் .

இத்தகைய தவறுகள் நிகழாதிருக்க நாம் மெல்லப் பயிற்சி பெற வேண்டும்.

மேலோட்டமான புறமனமானது வெளியுலகப் பார்வைகளால் ரொம்பக் கறைபட்டுப் போயிருக்கும் .

இதனால் அது எடுக்கும் முடிவுகள் தவறானவயாகவும் நேர்மையற்ற வழியில் செல்லத் தூண்டுவனவாகவும் அமைந்து விடுகின்றன.

ஆனால் உள் மனம் மகத்தான சக்தி சக்தி வாய்ந்தது. எந்த ஒரு சக்தியாலும் பாதிக்கப்படாதது. தவறிழைக்க எண்ணும் போதெல்லாம் இது தலை தூக்கும், உள் ளுக்குள் நெருடும், பதபதைக்கும், ஒத்து ழைப்பு கொடுக்க மறுக்கும் இந்த நிலையில் அவசரப்பட்டு ஒரு முடிவை எடுத்து விடாமல் ஆற அமர இடமளித்து உள் மனதிற்கும் புற மனத்திற்கும் இடையே அமைதியாக தர்ம யுத்தம் நடைபெற வாய்ப்புத் தர வேண்டும். ஆனால் மறந்தும் கூட உள் மனத்தை நிராயுத பாணியாக்கி விட்டு புறமனத்திடம் மட்டும் விருப்பு வெறுப்பு என்னும் வலிமை வாய்ந்த ஆயுதங்களைக் கொடுத்து விட கூடாது.

இப்போட்டியின் வெற்றி தோல்வியை அறிந்து கொண்டு, வெற்றி பெற்ற மனத்தின் வழியில் செல்லுங்கள். அந்த வழி நிச்சயமாக வாழ்வுப் பொன்னேட்டில் பொறிக்கப்படும் வைரப் பாதையாக இருக்கும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## ஆமையும் மந்திரக்கோலும்



அது தந்த குட்டி குட்டி உணவுத் துணுக்குகள் யாருக்கும் போதுமானதாக இல்லை எல்லா விலங்குகளும் ஆமை மீது கோபப்பட்டன.

மீண்டும் மீண்டும் உணவை வர வைக்கச் சொல்லி மிரட்டின. ஆமை திரும்பத் திரும்ப மந்திரக்கோலை பயன்படுத்தியது. குட்டி மந்திரக்கோல் ரொம்ப சீக்கிரமே உடைந்து துண்டு துண்டாகப் போய்விட்டது.

பசியாக இருந்த எல்ல விலங்குகளும் "போ... போ... போ... இன்னொரு மந்திரக் கோல்வாங்கிக் கொண்டு வா... பெரிய மந்திரக் கோல் கொண்டு வா" என்று ஆமையை விரட்டின. மீண்டும் தண்ணீர் தேவதையிடம் பறந்து சென்றது ஆமை.

''என்ன வேண்டும்?'' என்றுகேட்டபடி தோன்றினாள் தண்ணீர் தேவதை.

"மறுபடியும் மந்திரக் கோல் உடைந்து போய் விட்டது'' என்றது ஆமை. ''நீ எல்லோருக்காகவும் மந்திரக் கோலை பயன்படுத்தினாயா?''

''இல்லையே, நீ போட்ட நிபந்தனையை மீறவே இல்லையே... அப்படியிருந்தும் மந்திரக்கோல் உடைந்து போய்விட்டது''.

''அப்படியா? இப்போது உடையவே உடையாத மந்திரக் கோல் தருகிறேன்'' என்று இரும்பில் செய்த மந்திரக்கோல் ஒன்றை ஆமையிடம் கொடுத்து விட்டு மறைந்து போனாள் தேவதை.

''மந்திரக்கோலே மந்திரக்கோலே நீ என்ன செய்வாய்?'' என்று ஆமை கேட்டதும் மந்திரக் கோல் பாடியது...

''அடங்காத பேருக்கு அடி கொடுப்பேன்
பேராசை பிடிச்சாலும் அடி வெளுப்பேன்
அடியால் உடம்பில் தோல் உரிப்பேன்
வலியால் துடி துடிக்க வைப்பேன்''

என்று பாடிக் கொண்டே ஆமையை அடித்து விளாசியது இரும்பு மந்திரக்கோல். அடி வாங்கிய ஆமை மந்திரக்கோலைத் தூக்கிக் கொண்டு அலறி அடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்தது. வீட்டில் எல்லோரும் புதிய மந்திரக்கோல் உணவைக் கொடுக்கும் என்று ஆவலாக இருந்தார்கள். ஆமை தயங்கிய படி கேட்டது,

''மந்திரக்கோலே மந்திரக்கோலே நீ என்ன செய்வாய்?'' உடனே,

அடங்காத பேருக்கு அடி கொடுப்பேன்
பேராசை பிடிச்சாலும் அடி வெளுப்பேன்
அடியால் உடம்பில் தோல் உரிப்பேன்
வலியால் துடி துடிக்க வைப்பேன்

என்று பாடிக் கொண்டே ஆமையின் குடும்பத்தை வெளுத்து வாங்கியது மந்திரக்கோல்.


இதே மந்திரக்கோலைத் துக்கிக் கொண்டு அரண்மனைக்கு போனது ஆமை. அங்கேயும் பயந்து கொண்டே, ''மந்திரக் கோலே மந்திரக் கோலே நீ என்ன செய்வாய்?'' என்று முனகியது. அடுத்த நொடியே, அடி விழ தொடங்கிவிட்டது.

''அடங்காத பேருக்கு அடி கொடுப்பேன்
பேராசை பிடிச்சாலும் அடி வெளுப்பேன்
அடியால் உடம்பில் தோல் உரிப்பேன்
வலியால் துடி துடிக்க வைப்பேன்''

ஒவ்வொரு விலங்கும் சரிசமமாக அடி வாங்கிக்கொண்டு காட்டில் நாலா பக்கமும் தப்பி ஓடின. (முற்றும்)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்




மாந்தர் விடும் மூச்சில் கலந்துள்ள அசுத்தங்களைத் தாம் வாங்கிக் கொண்டு காற்றைத் தூய்மைப்படுத்தி உதவும் தாவரங்களின் உயர்வை அறிய முடிந்தது.

தீமை செய்பவர்க்கும் தாம் உள்ள அளவும் நன்மை செய்யும் நல்லியல்பு அவற்றிடம் காணமுடிந்தது. தம்மை வெட்டிக் கீழே சாய்க்கும் முரடனுக்கும் காயும், கனியும் நறு நிழலும் தந்து உதவும்.

அவற்றின் உயர்வைக் காண முடிந்தது. பூத்துக்குலுங்கும்பூவையரின் எழிலையும் பொலிவையும் செடி, கொடிகளிடம் முழுமையாகக் காண முடிந்தது.

### காமாசிரமம்

சரயூநதிக் கரையில் சஞ்சரித்த அவர்கள், பசுமையான சோலை ஒன்றினைக் கண்டனர். அதில் தவசியர் வசிக்கும் குடில்கள் இருந்தன. அம் முனிவர் இவர்களைக் கண்டதும் பேருவகை அடைந்தார்; வரவேற்பும், உண்டியும், இடமும் தந்து உபசரித்தனர்; எழில்மிக்க பொழில்கள் சூழ்ந்த ஆசிரமத்தில் இரவுப் பொழுதைக் கழித்தனர்.

பொழுது புலர்ந்தது; அந்த ஆசிரமம் அவர்கள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. அதன் ஆதி அந்தத்தைக் கேட்டு அறிய அவாவினர். அதன் பெயரே புதுமையாய் இருந்தது.

"காமாசிரமம்'' என அது வழங்கப்பட்டது. காமத்தை ஒழித்து, ஏம நெறி காணும் முனிவர்கள், தாம் வாழும் இடத்துக்கு இப்பெயர் சூட்டியுள்ளமை வியப்பைத் தந்தது. "இதற்கு ஏதேனும் தக்க காரணம் இருக்க வேண்டும்'' எனக் கருதினர். ஆரண வேதியனை அணுகி, ''இப்பெயர் இதற்கு அமையக் காரணம் யாது?'' என்று வினவினர்.

"மலரம்புகளை விட்டு மற்றவரை எரிக்கும காமன் இங்கே எரி பட்டான்; அதனால், இந்த இடம் ''காமாசிரமம்'' என வழங்கலாயிற்று'' என்றார். ''காமன் கூடவா தவம் செய்ய இங்கு வந்தான்?''

''செய்கிற தவத்தைக் கெடுக்க அவன் அம்புகளைத் தொடுக்க, அது சிவன் மேல் பட, அவர் சினந்து எரிக்க அவன் சாம்பல் ஆனான்'' என்று கூறினார்.

''மதன் மதம் அழிந்து, அவன் அதம் தீர்ந்து, அழிந்து ஒழிந்தான்'' என்பதைக் கேட்ட இவர்கள், ''ஆழம் தொரியாமல் காலைவிட்டால் இந்தக் கதிதான் நேரும்'' என்று பேசிக் கொண்டார்கள்.

''மன்மதன் எரிந்து விட்டானா?'' என்று இளையவன் கேட்டான். ''எரிந்தாலும் அவன் இன்னும் செயற்பட்டுக் கொண்டு தான் இருக்கிறான்'' என்று முனிவர் விடை கந்தார்.

இந்தக் கதை கேட்பதற்குச் சுவையாக இருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தூய்மையின்றி ஒருவன் கோயிலுக்குள் சென்றால் அவன் ஏற்கனவே செய்துள்ள பாவங்களுடன் மற்றொரு பாவத்தையும் செய்து வருகின்றான் என்று அர்த்தம். – விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாரீசனாக நடிக்கும் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ்

புதிய அரசியலமைப்பினூடாகத் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடனான சந்திப்பை அடுத்து, இந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற்படி விவரத்தை தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பினூடாகத் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படுமென்று அமைச்சர் பீரிஸ் கூறுவதில் ஏதேனும் நம்பகத்தன்மை உண்டா? என்பதுதான் நம் கேள்வி.

நல்லாட்சியில் அரசியலமைப்புச் சீர்திருத்தம் கொண்டு வரப்படுகிறது. அதன்மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படுமென நல்லாட்சியினர் கூறினர்.

அவர்கள் கூறியதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் ஆமோதித்தார்.

அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலுக்கு வரப்போகிறது. அதுவரை நாங்கள் வேறு விடயங்களில் கவனம் செலுத்த முடியாது. அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலுக்கு வந்துவிட்டால், எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும். அதுவரை நாங்கள் அமைதியாக – பொறுமையாக இருக்க வேண்டும் என இரா.சம்பந்தர் கூறியபோது,

அதனைத் தமிழ் மக்கள் மலையாக நம்பினர்.

ஆனால் இரா.சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து நல்லாட்சியின் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கியதைத் தவிர, தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

அதேநேரம் நல்லாட்சியின் அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கு மகிந்த ராஜபக்ஷ தரப்பு கடும் எதிர்ப்புக் காட்டியது.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது மீண்டும் அரசியலைமப்புச் சீர்திருத்தம் என்பதை முன்வைத்து அதனூடாகத் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படுமென அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறுவதனூடாக, இந்தியாவையும் உலக நாடுகளையும் சமாளிக்க அவர் முற்பட்டுள்ளார்.

ஆனால் அது எதுவும் நடக்கப்போவதில்லை என்பது அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு நன்கு தெரியும்.

ஆம், ஆட்சித் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவின் ஒவ்வொரு உரையிலும் பௌத்த சிங்களம் என்பதே தன் மூச்சென்று கூறி வருகிறார்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் என அவர் ஒருபோதும் கூறவில்லை.

அரசியலமைப்பினூடாகத் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என்றால், அதனை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது உரையில் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும்.

ஆனால் அவர் அதைச் செய்யாதபோது; அமைச்சர் பீரிஸ் கூறுகின்ற அரசியலமைப்பு என்பது மாரீசனின் மாயமான் வித்தை என்பதைத் தவிர வேறில்லை என்பதுதான் உண்மை.

# சமூகத்தில் அறிகுறிகள் தென்படாத கோவிட் தொற்றாளர்கள் அதிகம்

## சுகாதார வழிமுறைகளை பின்பற்றாவிடில் நாட்டில் நிலைமை மோசமடையும் என எச்சரிக்கை

(கொழும்பு)

சமூகத்தில் அறிகுறிகள் தென்படாத கொவிட் தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டுவரும் நிலையில் பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளை சரியான வகையில் பின்பற்றாவிடில் நிலைமை மோசமடையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது பதிவாகிவரும் கோவிட் நோயாளர்களுக்காக சுமார் 7,000 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஒமிக்ரோன் திரிபுடன் கூடிய கோவிட் தொற்றாளர்களை வீடுகளில் தங்கவைத்து சிகிச்சையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதன் காரணமாக தற்போது இடைநிலை கோவிட் சிகிச்சை நிலையங்களுக்கான தேவைப்பாடு இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், பொது போக்குவரத்து வாகனங்களில் பயணிக்கும் சந்தர்ப்பங்களில் சமூக இடைவெளியை முறையாக பேண முடியாத சந்தர்ப்பங்களில், முகக்கவசங்களை முறையாக அணிதல் மற்றும் தொற்றுநீக்கியை பயன்படுத்துதல் ஆகிய செயற்பாடுகளை கட்டாயமாக கடைபிடிக்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

சுகாதார வழிமுறைகளை பின்பற்றுதிலிருந்து தவறும்பட்சத்தில் கோவிட் தொற்று மேலும் பரவலடைந்து நிலைமை மோசமடைவதற்கு வழிவகுக்கக்கூடும் என வைத்தியர் ஹேமந்த ஹேரத் மேலும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்ட நபர்கள் மூன்றாவது தடுப்பூசியையும் கட்டாயம் பெற்றுக்கொள்ள முன்வர வேண்டுமென அவர் பொதுமக்களை கோரியுள்ளார்.

சமூகத்தில் கோவிட் அறிகுறிகள் வெளிகாட்டும் தொற்றாளர்களை காட்டிலும் எவ்வித அறிகுறிகளை கொண்டிராத கோவிட் தொற்றாளர்களே அதிகளவில் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக அனைவரும் ஒன்றிணைந்து முறையாக சுகாதார வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ம)

# கோப் குழுவின் தலைவராக சரித ஹேரத் மீண்டும் நியமனம்

## கோபா குழுவுக்கு திஸ்ஸ விதாரண தெரிவு

(கொழும்பு)

கோப் எனப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் தொடர்பான பாராளுமன்றக் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத், மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கோப் குழுவுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்கள் தொடர்பான விபரங்கள், பிரதி சபாநாயகரால் கடந்த 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், முன்தாக கோப் குழுவின் தலைவராக செயற்பட்டு வந்த, பேராசிரியர் சரித ஹேரத், மீண்டும் அப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், கோபா எனப்படும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராக் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற குறித்த குழுக்களின் கூட்டங்களின்போது இந்தத் தெரிவுகள் இடம்பெற்றுள்ளன. (ம)

## வவுனியாவில் இன்றுமுதல் பிசிஆர் சோதனை ஆரம்பம்

வவுனியா பொது வைத்தியசாலையில் இன்று வெள்ளிக்கிழமை முதல் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதுவரை காலமும் வவுனியா மாவட்டத்தின் பிசிஆர் பரிசோதனைக்காக மாதிரிகள் யாழ்ப்பாணம் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களிற்கு அனுப்பப்பட்டு, அதற்குரிய முடிவுகள் பெறப்பட்டு வந்தன.

கடந்த ஆவணி மாதமளவில் மத்திய அரசினால் வவுனியா வைத்தியசாலைக்கு 35 மில்லியன் ரூபா பெறுமதியான பிசிஆர் ஆய்வுகூட தொகுதியானது கொள்கையளவில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிலையில் பல்வேறு தரப்பினரின் தீவிர முயற்சியின் பலனாக அதற்கு தேவையான உபகரணங்கள் ஒவ்வொன்றாக தருவிக்கப்பட்டு இன்று வெள்ளிக்கிழமை முதல் வவுனியா பொது வைத்தியசாலையில் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.(ம-250)

## ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு மன்னார் - வவுனியா வீதி அவசரமாக புனரமைப்பு

ஜனாதிபதியின் வருகையை அடுத்து மன்னார் வீதியின் பல பகுதிகளிலும் மழைக்கு மத்தியிலும் முன்னெடுக்கப்பட்ட அவசர புனரமைப்பு நடவடிக்கையால் வீதியில் காணப்பட்ட பல குழிகள் காணாமல் போயுள்ளன.

வவுனியா, மன்னார் வீதியில் உள்ள பம்பைமடுப் பகுதியில் அமைந்துள்ள வவுனியா பல்கலைக்கழகத்திற்கு இன்று விஜயம் செய்யவுள்ளார். இதனையடுத்து வவுனியாவில் இருந்து மன்னார் வீதி ஊடாக பல்கலைக்கழகம் செல்லும் வரை உள்ள பகுதியில் வீதி புனரமைப்பின் போது நீண்ட நாட்களாக திருத்தப்படாது விடப்பட்டிருந்த பகுதிகள் மழைக்கு மத்தியிலும் அவசர அவசரமாக திருத்தப்பட்டு வீதிகளில் குழிகளின்றி மட்டப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் மன்னார் - வவுனியா வீதி புனரமைப்பின் போது முழுமை பெறாது காணப்பட்ட 7 இடங்கள் அவசர அவசரமாக புனரமைக்கப்பட்டுள்ளது. (ம-250)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பாராட்டும் திறன்

ஒருவரைப் பாராட்டும் போது, அவரை இன்னொருவருடன் ஒப்பிட்டுப் பார்க்கிறீர்கள். ஒருவரைப் பாராட்ட இன்னொருவரைத் தாழ்த்தி விடுகிறோம். ஒருவரின் தவறைச் சுட்டிக்காட்ட விரும்பும் போது மற்றொருவரைப் பாராட்டுகிறோம்.

பாராட்டுவதில் கஞ்சத்தனம் சிலருக்கு. வெட்கம் சிலருக்கு. சிலருக்கு பாராட்டுவது பழக்கமேயில்லை. உள்நோக்கத்தோடு பாராட்டுபவர் சிலர். உயர்த்தி பாராட்டுபவர் சிலர். தாழ்ந்த தம் சுயமதிப்பை மறைக்கத் தன்மைத்தாமே பாராட்டிக் கொள்பவர் சிலர். மெய்யுணர்வில் மலர்ந்த நிலையில் உதிக்கிறது உண்மையான பாராட்டு.

மெய்யுணர்வின் உயர்நிலையிலிருந்து வெளிவரும் [illegible] பாராட்டு வருகிறது. (தொடரும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

உலகம் காரியப்பாடுடைத்து, கர்த்தா இன்றி, காரியம் நிகழாது. நாம் ஒரு குடத்தைக் காண்கிறோம். அக்குடத்துக்கு மண் முதற் காரணம். தண்ட சக்கரங்கள் துணைக் காரணம். குயவனார் நிமித்தக் காரணம்.

இது போல் உலகிற்கு மாயை முதற் காரணம். அருட்சக்தி துணைக் காரணம் என உணர்தல் வேண்டும்.

திருக்கோயில்களிலுள்ள திருவுருவங்கள் தேவர்களாலும் முனிவர்களாலும், நால்வர், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர்களாலும் நிறுவப் பெற்ற காரணத்தால் அவை மேன்மை பெற்று வழிபடுவோருடைய வல்வினைகளை அகற்றி, வேண்டிய வரங்களை வழங்கி அருள் புரிகின்றன.

மனிதப் பிறப்புக்கு இறை வழிபாடு இன்றியமையாதது என உணர்க. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

75

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

அட்டவணை 18 சிறும்பொழுது நேரம்

| | | |
|---|---|---|
| காலை | = | 1 ஓரை முதல் 4 ஓரை வரை ( 6 முதல் 10 மணி வரை) |
| நண்பகல் | = | 5 ஓரை முதல் 8 ஓரை வரை (10 முதல் 2 மணி வரை) |
| ஏற்பாடு | = | 9 ஓரை முதல் 12 ஓரை வரை (2 முதல் 6 மணி வரை) |
| மாலை | = | 13 ஓரை முதல் 16 ஓரை வரை (6 முதல் 10 மணி வரை) |
| இடையாமம் | = | 17 ஓரை முதல் 20 ஓரை வரை (10 முதல் 2 மணி வரை) |
| வைகறை | = | 21 ஓரை முதல் 24 ஓரை வரை (2 முதல் 6 மணி வரை) |

### வாரப்பகுப்பின் அடிப்படை

ஏழு வகையான ஓரையில் தொடங்கும் ஏழு நாட்கள் முடிந்த பிறகு அடுத்த சுற்று தொடங்கும். அப்படி ஏழு வகையான ஓரையில் தொடங்கும் ஏழு நாட்கள் கொண்ட ஒரு சுற்று, ஒரு வாரம் அல்லது ஒரு கிழமை எனப்படும். ஒரு நாளின் தொடக்க ஓரை, ஞாயிறு ஓரை வரும் நாள் (ஞாயிற்றுக்கிழமை) வாரத்தின் தொடக்கமாகக் கொள் ளப்பட்டது. அதன்படி ஏழு நாட்களும் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்பனவாகும்.

பூமி தன் அச்சில் சுழலுவதை அடிப்படையாகக் கொண்டு அளக்கப்படுபவைபற்றிப் பார்த்தோம். இப்போது பூமி சூரியனைச் சுற்றி வருவதை அடிப்படையாகக் கொண்டு அளக்கப்படுபவை பற்றிப் பார்போம்.

### மாதப் பகுப்பின் (பூமி சூரியனைச் சுற்றிவரும்) அடிப்படை


பண்டைய தமிழர் மத்தியில் சூரியமானம், சந்திரமானம் எனும் இரண்டு வகையான மாதங்களைக் குறிக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளன. சூரியமானம் என்பது பூமிக்குச் சார்பாகச் சூரியனுடைய இயக்கத்தை அடிப்படையாக வைத்துக் காலத்தைக் கணிக்கும் முறையாகும். சந்திரமானம் சந்திரனுடைய இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கணிக்கும் முறையாகும்.

### சூரியமானம்

சூரியமானம் என்பது, பூமிக்குச் சார்பாகச் சூரியனுடைய இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்தச் சார்பு இயக்கத்தில், சூரியன் பூமியை ஒரு முறை சுற்றி வருவதுபோல் தோன்றும் காலம் ஒரு ஆண்டு ஆகும்.

இந்தச் சுற்றுப் பாதையின் தளம் பூமியை மையமாகக் கொண்டு அதைச் சுற்றிய அண்டவெளி, ஒவ்வொன்றும் 30 பாகைகள் (Degrees) அளவுள்ள 12 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு பிரிவும் ஒரு இராசி எனவும், 12 இராசிகளினதும் தொகுதி இராசிச்சக்கரம் எனவும் அழைக்கப்படுகின்றன.

இதனைப் படம் 5 காட்டுகிறது. எனவே ஒவ்வொரு முழுச் சுற்றின் போதும் சூரியன் மேடம் முதல் மீனம் வரை உள்ள 12 சூரிய மாதங்கள் (இராசிகள்) வழியாகப் பயணம் செய்கிறது. பூமியைச் சுற்றிய சூரியனின் சார்பு இயக்கத்தில் இந்த ஒவ்வொரு இராசியிலும், சூரியன் இருக்கும் காலப் பகுதியே ஞாயிறு (சூரிய மாதம்) ஆகும். இப்படி காலக் கணக்கை கணிக்கும் நிலையைத் தமிழில் காலந்தேர் (காலம்+தேர்) என்று அழைக்கிறோம். தமிழர், சூரியனின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கலைகளான சோதிடம், ஓரை பார்த்தல், சாதகம் பார்த்தல், முதலிய கலைகளுக்கு ஞாயிற்றைக் கணித்துப் பயன்படுத்தினர். இந்தியாவில் மலையாளிகளும் தமிழரும் சூரியமான முறையையே பின்பற்றுகிறார்கள். தமிழகத்தில் சூரியமான முறையே வழக்கத்தில் இருந்தாலும் ஞாயிறுகளைக் (சூரிய மாதங்களைக்) குறிக்க திங்கட் பெயர்களே (சந்திர மாதப் பெயர்களே) பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.




இராசிச் சக்கரத்தில் சூரியனின் இயக்கத்தின் போது உண்டாகும் தமிழ் மாதங்களைக் காட்டும் விளக்கப்படம். (படம் 5)

### தமிழ் மாதப்பிறப்பு

சூரியன் ஒவ்வொரு இராசியிலும் புகும் நேரம் அந்தந்த சூரிய மாதங்களுக்கு உரிய மாதப் பிறப்பு எனப்படும். சூரியன் மேட இராசியுட் புகும் போது பிறக்கும் மாதமே தமிழ் முறைப்படி ஆண்டின் முதல் மாதம் என்பதால், இந்நிகழ்வே புத்தாண்டுப் பிறப்பும் ஆகும். அதாவது தமிழ் மாதங்கள் சித்திரை முதல் பங்குனி முடிய பன்னிரெண்டு ஆகும். பூமி தன் அச்சில் சுழலுவதை அடிப்படையாகக் கொண்டு நாட் களும், சூரியனைச் சுற்றி வருவதால் ஆண்டுகளும், மாதங்களும் உருவாகின்றன. இவ்விரு தோற்றப்பாடுகளும் ஒன்றிலொன்று தங்கியிராத இரண்டு வெவ்வேறு விடயங்களாக இருப்பதால், புதிய மாதப்பிறப்பும், புதிய நாள் தொடங்குவதும் ஒரே நேரத்தில் அமைவதில்லை. தமிழ் முறைப்படி ஒரு நாள் என்பது குறிப்பிட்ட நாளில் சூரிய உதயம் தொடக்கம் முதல் அடுத்த நாள் சூரிய உதயம் வரையான காலமாகும்.

ஆகவே நாளின் தொடக்கம் சூரிய உதயமாகும். சூரியன் இராசி ஒன்றுக்குள் புகும் நேரம் (மாதப் பிறப்பு) ஒரு நாளின் எந்த நேரத்திலும் நிகழக் கூடும். இவ்வாறு சூரியன் அந்த இராசி ஒன்றுக்குள் புகும் நேரத்திலேயே புதிய மாதம் தொடங்கும். ஆனாலும் திகதி குறிக்கும் வசதிக்காக, மாதப் பிறப்பு சூரிய உதயத்துக்கும், சூரிய மறைவுக்கும் இடையில் (நாளின் முதற்பாதி) அமைந்தால் அந்த நாளே மாதத்தின் முதல் நாளாகக் கொள்ளப்படும். மாதப்பிறப்பு சூரியன் மறைந்த பின் அடுத்த சூரிய உதயத்துக்கு முன் நிகழுமாயின் அடுத்த நாளே மாதத்தின் முதல் நாளாகக் கொள்ளப்படும்.

### தமிழ் மாதங்களின் கால அளவு

ஒரு குறிப்பிட்ட இராசிக்குள் புகுந்து அதைவிட்டு வெளியேறும் வரையான காலமே ஒரு சூரிய மாதம் ஆகும். பூமிக்குச் சார்பாகச் சூரியனின் இயக்கம் நீள்வட்டப் பாதையில் அமைந்திருப்பதால் இராசிகளில் சூரியனின் பயணம் ஒரேகால அளவைக் கொண்டிருப்பதில்லை. ஒவ்வொரு இராசியையும் சூரியன் கடப்பதற்கு வெவ்வேறு கால அளவு எடுத்துக் கொள்கிறது. இதனால் மாதங்களும் வெவ்வேறு அளவுள்ளவையாக உள்ளன. தமிழ் மாதங்களின் கால அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை 19 ஒவ்வொரு மாதங்களிலும் உள்ள நாட்களின் எண்ணிக்கை உள்ளன. அவை முழு நாட்களாக இல்லை. வசதிக்காக மாதங்களில் உள்ள நாட்களின் எண்ணிக்கை பின்வருமாறு அமையும். சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, புரட்டாதி மற்றும் பங்குனி மாதங்களில் 31 நாட்கள். ஆனி மாதம் மட்டும் 32 நாட்கள். மார்கழி மாதம் 29 நாட்கள். ஏனைய மாதங்களில், கதிரவன் அந்தந்த இராசிகளில் தங்கும் நாட்களைப் பொறுத்து 29 அல்லது 30 நாட்கள் ஆக இருக்கும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 பேர்...

அதன்படி, நாட்டில் இதுவரை 15,723 பேர் கோவிட் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர். (ம)

## +1,297 பேருக்கு...

யாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 624,545ஆக அதிகரித்துள்ளது. (ம)

## கிளிநொச்சியில்...

நேற்றுக் காலை 6 மணியளவில் குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

இவரது உடல் சுகாதார முறைப்படி தகனம் செய்யப்படவுள்ளது. (ம)

## தெல்லிப்பழை...


துள்ளார்.

தெல்லிப்பழை சாந்தை வீதி வறுத்தலைவிளான் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அதேவேளை அவருடன் பயணித்த மற்றுமொரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து சம்பவம் தொடர்பில் டிப்பர் சாரதி காங்கேசன்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-33,104)



















## எரிவாயு அடுப்பு...

சிலிண்டர் அடுப்பு நேற்று நண்பகல் 12.00 மணியளவில் வெடித்து சிதறியுள்ளது.

குறித்த வீட்டில் உள்ளவர்கள் மதியத்துக்கான சமையல் வேலைகளை முடித்து விட்டு வெளியே வந்தவேளை இவ்வாறு அடுப்பு வெடித்துச் சிதறியது.

எனினும் வீட்டுக்கோ அல்லது வீட்டில் உள்ளவர்களுக்கோ எந்தவிதமான சேதங்களும் ஏற்படவில்லை. (ம-104)

## ஜனாதிபதி இன்று...

வவுனியா பல்கலைக்கழகத்திற்கு இன்று விஜயம் செய்யும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதனை அங்கு அங்குராப்பணம் செய்து வைக்கவுள்ளார்.

இந்நிலையில் பல்கலைக்கழகத்திற்கு நுழைவாயில் ஊடாக உட்சென்று பல்வேறு பீடங்களுக்கும் பிரிந்து செல்லும் பிரதான பகுதியில் முக்கோண வடிவில் பல்கலைக்கழகத்தின் பெயருடன் கூடிய கல்வெட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

வீதியில் இருந்து உட்செல்லும்போது காட்சிக்கு புலப்படும் வகையில் தமிழ் மொழியும் மற்றைய இரு பக்கங்களில் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு வீதியில் இருந்து பல்கலைக்கழகத் திற்குள் செல்லும்போது பீடங்களுக்கு பிரிந்து செல்லும் பிரதான பகுதியில் தமிழ் மொழியில் காட்சி கொடுத்த கல்வெட்டு அவசர அவசரமாக அகற்றப்பட்டு மறுபக்கம் மாற்றப்பட்டுள்ளதுடன், முன் பகுதியில் சிங்கள மொழி கல்வெட்டும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-250)

## பயங்கரவாத...

1979ஆம் ஆண்டு 48ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டம் மீளாய்வு செய்யும் நோக்கில் குழுவொன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் கடந்த ஜுன் மாதம் 24ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு பயங்கரவாத தடைச் சட்ட மீளாய்வு குறித்து பல்வேறு தரப்பினரின் ஆலோசனைகளைப் பெற்று அறிக்கையை தயாரித்தது.

இந்த அறிக்கை குழுவின் தலைவர் ஜெனரல் கமால் குணரட்ணவினால் ஜனாதிபதியிடம் கடந்த நவம்பர் மாதம் கையளிக்கப்பட்டது.

அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தேவையான ஏற்பாடுகளை திருத்துமாறு குழுக்களின் அறிக்கைகளின்படி நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையிலேயே சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடைச் சட்டம் வெளியுறவு அமைச்சரால் திருத்தங்களுக்காக பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. (ம)

## பயங்கரவாத திருத்...

எம்.ஏ.சுமந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் பாராளுமன்றில் நேற்று வெளிவிவகார அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டது. இதனையடுத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்ட திருத்த சட்டமூல விவாதத்தில் அரசாங்கத் தரப்பின் உறுப்பினர்கள் மிகக்குறைவான எண்ணிக்கையில் கலந்து கொண்டுள்ளனர் என்றும் அவர் இதன்போது சுட்டிக் காட்டினார்.

மேலும் இந்த சட்ட மூலமானது நீதியமைச்சரால் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றபோதிலும் வெளிவிவகார அமைச்சரினால் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த சுமந்திரன், இதன்மூலம் இந்த சட்டம் குறித்து அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கவில்லை என்பது புலனாகிறது எனவும் குற்றம் சுமத்தினார். (ம)

## 10க்கு மேற்பட்ட...

கடித்துள்ளது.

யாழ்.நகர் மத்தியில் கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி என்பனவற்றில் நேற்று வியாழக்கிழமை மதியம் முதல் மாலை வரையிலான நேரத்தினுள் 10க்கும் மேற்பட்டவர்களை நாய் கடித்துள்ளது.

அதில் வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவருக்கு இரண்டு கால்களிலும் நாய் கடித்துள்ளது. அதேவேளை அப்பகுதிகளில் சுமார் 10க்கும் மேற்பட்டவர்களை குறித்த நாய் கடித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்.மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபனுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், குறித்த நாயினை மாநகர சபை ஊழியர்கள் ஊடாக பிடிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், நாய் தொடர்பிலான தகவல்கள் தெரியாமையால் நாயினை பிடிக்க முடியவில்லை என தெரிவித்துள்ளனர்.

குறித்த நாய் தொடர்பிலான தகவல்கள் தெரிந்தவர்கள் மாநகர சபைக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (ம-33)

## எந்...

நடத்துவதில் ஏற்பட்டுள்ள சட்டச் சிக்கல் நிலை காரணமாக விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு பரிசீலித்து வருகின்றது என வெளியாகியுள்ள செய்தி குறித்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

“எந்தத் தேர்தலையும் எந்த வேளையிலும் எதிர்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது.

ஆனால், ராஜபக்ஷ அரசுக்கு தேர்தலை எதிர்கொள்ளும் திராணி இல்லை. அதனால்தான் உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை ஓராண்டுக்கு இந்த அரசு நீடித்தது. இப்போது விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு பரிசீலித்து வருகின்றது என வெளியாகியுள்ள செய்தி வேடிக்கையாகவுள்ளது என்றார். (ம)


## அரச தாதியர்...

யோருக்கு எதிராக சட்டமா அதிபர், மேற்படி சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்துமாறு நீதிமன்றத்திடம் உத்தரவு பிறப்பிக்கக் கோரி வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

சட்டமாஅதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த போதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.


இந்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக வைத்தியசாலைகளில் நோயாளர் பராமரிப்பு சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி விக்கும் டி ஆப்ரூ நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து, கொழும்பு நீதவான் அருண அளுத்கே இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளார். (ம)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10119)

076 825 7716 (ஆகாஸ்)



**வேலையாட்கள் தேவை**

உடுவிலில் அமைந்துள்ள இந்து ஆலயத்திற்கு ஆலயத்தின் சமையலறையையும் மற்றும் ஆலயத்தின் சுற்றுப்புறச் சூழலையும் துப்புரவாகப் பேணிப் பாதுகாக்க வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

தொடர்புகளுக்கு (10098)

075 447 2884



**நிரந்தர வேலை வாய்ப்பு**

AIA காப்புறுதி நிறுவனத்தில் நிரந்தரமான வேலை வாய்ப்பு உள்ளமையால் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பதவி நிலை - I

வெளிக்கள முகாமையாளர் (Wealth Planner Manager)

தகுதி
- A/L சித்தி
- காப்புறுதி துறையில்/ தனியார் துறையில் குறைந்தது 1 வருட அனுபவம்.

சம்பளம் - 50,000/= (நிரந்தரம்)



பதவி நிலை - II

அலுவலக உதவியாளர்

தகுதி
- O/L சித்தி
- கணனி அறிவு

ஆர்வம் உள்ளவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

(C-3755) 076 879 2992



**Chemistry (22,23 A/L)**

தனிப்பட்ட, குழு வகுப்புகளுக்கு அழையுங்கள். (10127)

076 791 0034



**Atom Chemistry Centre**

வேம்படி சந்தி அருகாமையில்
[ BCAS University அருகில் ]

புதிய பிரிவுகள் ஆரம்பம் 22/23 A/L

**S.VASU B.SC**

- Organic Chemistry
- Inorganic Chemistry
- Physical Chemistry

(10126)

விபரங்களுக்கு 076 791 0034



**யப்பான் சைக்கிள்**

அறிவுள்ளோரின் தெரிவு

1.லேடீஸ் சைக்கிள்கள்
2.யென்ஸ் சைக்கிள்கள்
3.கியர் சைக்கிள்கள்
4.மடக்கும் சைக்கிள்கள்
5.பாரம் ஏற்றும் சைக்கிள்கள்
6.LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்
7. Baby சைக்கிள்கள்



இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு.
கழுவிப் பூட்டுதல், திருத்த
வேலைகள் இல்லை.
நீண்டகாலப் பாவனை.

யப்பான் சைக்கிள் விற்பனை செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
விஷேட விலைக்கழிவு உண்டு.

விற்பனைக்கு பிந்திய சேவைகள் (திருத்த வேலைகள்)

(C-3758)

**யப்பான் சைக்கிள் B பசார்**

கந்தரோடை றோட், T.P-078 615 5
சுன்னாகம் (சுன்னாகம் சந்தியிலிருந்து கந்தரோடை றோட்டில் 500m)



விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3746)

0768226240 DHL



**LIVE IN CANADA**

இலவச கருத்தரங்கு

கனடாவில் வேலைவாய்ப்புகள், நிரந்தர வதிவிடம், உயர்கல்வி வழிமுறைகளும் ஆலோசனைகளும்

13-02-2022 ஞாயிறு காலை - 11 மணி

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

(C-3684)

முற்பதிவு அவசியம் 0777-068-777



**வேலையாட்கள் தேவை**

யாழ். மாவட்டத்தில் இயங்கும் ஆடைத் தொழிற்சாலை ஒன்றிற்கு

- உற்பத்தி முகாமையாளர் (ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த அனுபவமுள்ளவர்கள்)
- தையல் வேலை
- பொதியிடல்
- மேற்பார்வையாளர்கள்

உடன் தேவை.

- தங்குமிட வசதி உண்டு.
- ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த வர்களுக்கு முன்னுரிமை.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- பழக விரும்புவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

(10130)

: 077 670 1495
Call: 077 748 2444


# ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

## நன்றி நவிலலும்

கடந்த மார்கழித் திங்கள் 28 ஆம் நாள் புதன்கிழமை (12.01.2022) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி

அமரர்

## அன்னம்மா செல்லையா

**தோற்றம் : 11.08.1940** **மறைவு : 12.01.2022**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.02.2022) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் சபிண்டீகரணக் கிரியைகள் இன்றைய தினம் அன்னாரது இல்லத்திலும் நடைபெற்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நாளை (12.02.2022) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

எமது குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து ஆறுதல் கூறியோர், தொலைபேசி வாயிலாகவும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தோர், பிரசுரம் மூலமும் பத்திரிகை மூலமும் பதாதைகள் மூலமும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோர், அஞ்சலி உரை நிகழ்த்தியோர், இறுதிப் பயணத்தில் கலந்துகொண்டோர், இறுதிக் கிரியை, ஆத்மசாந்திக் கிரியைகளை நிறைவுபெறச் செய்த குருமார்கள் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

(C-3745)

சித்திர வேலாயுதர் கோவிலடி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.